SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

18712

அய்யனின் கேள்வி

"இளைஞரே! தாங்கள் ஹரிஜன சேவையில் ஈடுபடுவீரா?"

(போட்டோ எடுத்தவர்: ரஜாக். அனுப்பியவர்: சங்கு ஏஜண்ட், மருதாசலம்.)

புத்தகம் 4. தைமீ 20உ (2-2-34) வெள்ளி இதழ் 10.

உங்கள் கருத்து

படிக்கும்பொழுது ருசியாயிருந்து அதோடு ஒழிந்து விடுபவை சில எழுத்துக்கள்; ஹ்ருதயத்திலே சில உணர்ச்சி அலைகளை எழுப்பி, எண்ணத்திலும் மனோபாவத்திலும் சில மாறுதல்களுக்கு அடிப்போட்டுவிட்டுச் செல்லுவன வேறு சில எழுத்துக்கள்; அறிவை விசாலப்படுத்தி, புதிய பொருள்களைக் காட்டி நிற்பன பற்றும் சில எழுத்துக்கள். இது மேலெழுந்தவாரியாகச் செய்த பிரிவினைதான்.

இந்த மூன்று வகைகளில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்ற விவகாரம் நமக்கு வேண்டியதில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பயனுண்டு. ஒன்றையொன்றென நாம் பயங்குவதால் பட்டில், நாம் நஷ்டம் அடையத் தவறுவதில்லை. குப்பைகூட ஒரு பதார்த்தந்தான்; ஆனால், அது நெல் வயலில் எருவாய்க் கிடக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் இன்று தமிழ் மொழியை உத்தாரணம் செய்துவிட வேண்டுமென்ற ஆசை கிளப்பி யிருக்கிறது. அநேகம் பண்டிதர்களும் ஆசிரியர்களும் தமிழ் வளர்ச்சியில் சிரத்தை காட்டுகின்றனர். அவர்கள் ஒருவர்க் கொருவர் உதவியா யிருக்கவேண்டும்; ஒருவர்க் கொருவர் சுதந்திரமும் தரவேண்டும். பொதுஜனங்களும் இவர்களுக்கு ஆதரவு தரவேண்டும். பண்டிதர்களும் ஆசிரியர்களும், பொதுஜனங்களுடைய ஆதரவைப் பெறுவதற்கும், அவர்களுடைய ஆதர்சங்களைத் தூய வழியில் வளர்ப்பதற்கும், வேண்டிய முறைகளில் உழைக்கவேண்டும்.

பி. ஏ. பாடங்களை அரிச்சுவடி ரூபத்திலேயே கற்றுக்கொடுத்து விடுவதாகச் சொன்னால், அது எப்படி யிருக்கும்? இலக்கியத்தை யெல்லாம் ஹாஸ்யமாகவே செய்துவிட வேண்டும் எனில், அதுதான் எவ்விதமிருக்கும்? 'எளிய, நடை, எளிய நடை' என்ற கூக்குரலும் சரி, 'தூய தமிழ், உயர்ந்த நடை' என்ற சத்தமும் சரி, என்னவோ முழு உண்மையையும் உணர்ந்த வார்த்தைகள் அல்ல என்றுதான் தோன்றுகிறது.

நாலும் எட்டும் பன்னிரண்டு என்று கூட்டல் கற்றுக்கொண்டிருக்கும் ஒருவனுக்குத் திருகோண கணிதத்தை எளிய நடையில் சொல்லிக்கொடுத்து விடவேண்டும் என்று ஒருவர் சொன்னால், சிரிப்பதைத் தவிர, வேறு வழியில்லை.

ஜனங்கள் சிறிதும் சிரமப்படாமலே, ராஜீயம், பொருளாதாரம், இலக்கியம், இலக்கணம், ஸயின்ஸ் ஆர்ட், சங்கீதம், நாடகம் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு விடவேண்டும் என்று அடுக்கலாம்; ஆனால் நடக்கிற காரிய மல்ல. ஏதோ சிறிது சிறிது எளிது படுத்தலாம். ஆனால், "தட்டினவனுக்குத்தான் திறக்கும்." என்னதான் செய்தாலும், ஆசையுடன், சிறிது சிரமப்பட்டுப் படிப்பவனுக்குத்தான் பொருள்கள் விளங்கும்.

அதுவேண்டும், இதவேண்டும், கலைவேண்டும், ஸயின்ஸ்வேண்டும் என்று சும்மாப் [illegible]ஜனை செய்வதால் பயன் இல்லை. எல்லாம் எழுதப்படவேண்டும். எழுதியவற்றை, ஆதரிக்கவேண்டும். பொதுஜனங்களுக்கு அவற்றில் ஆசை உண்டாக்கவேண்டும். செல்வாக்குள்ள மனிதர்களும் பத்திரிகைகளும் அவற்றைக் குறித்து விஸ்தாரமாய், நன்றாய்ப் பிரசாரம் செய்யவேண்டும் என்றுகூடச் சொல்லலாம். இலக்கிய வளர்ச்சி என்பது ஜனநாயகத் தேர்தல் அல்ல. ஓட்டு எடுத்து முடிவு சொல்லப் பண்டிதர்கள் தேவையில்லை. ஜனங்களின் அபிப்பிராயங்களுக்கே ரூபங் கொடுக்கவும் அவற்றை நல்ல வழியில் செலுத்தவும் தான் அறிஞர் வேண்டும்.

பொழுது போக்காய் ருசிப்பதற்குரிய எழுத்துக்களைத் தவிர, மற்றவற்றையெல்லாம் நிராகரிக்கவேண்டும் என்ற மனோபாவம் ஜனங்களிடம் பரவுவதற்கு யாராவது காரணமாயிருந்தால், தமிழ்த்தாய் ஒரு அங்குலம்கூட அவர்களால் நகரமாட்டாள். ஒரு கட்டுரையையோ, நூலையோ படித்ததும், "இதனின்றும் நமக்குப் புதிதாய், விளங்கிய பொருள் என்ன?" என்ற கேள்வியை ஒவ்வொருவனும் கேட்டுப் பார்க்கவேண்டும். படிப்பது, குண வளர்ச்சிக்கும் ஞான விரிவுக்கும் என்றால், இந்தக் கேள்வி மிக அவசியமாகும்.

"சங்கு"ப் பத்திரிகை போன்ற சிறிய பத்திரிகைகள் 'சர்வ கலாசாலை'களாக விளங்க முடியாது. ஆயினும் ஒவ்வொரு துறையிலும் தன்னாலான தொண்டை, கட்டுரைகளை வெளியிடுவதன் மூலமோ, அபிப்பிராயங்கள் வெளியிடுவதன் மூலமோ செய்யமுடியும். அதற்குப் பல எழுத்தாளர்களின் கூட்டுறவு வேண்டும்; தமிழரின் ஆதரவு வேண்டும். வாசகரும் எழுத்தாளரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தத்தம் கருத்துக்களையும், யோசனைகளையும், அபிப்பிராயங்களையும் பரிமாறிக்கொள்ளுவதுகூடப் பலன் அளிக்கும். சாத்தியமும், சௌகரியமும் இருந்தால் உங்கள் கருத்துக்களை நீங்கள் ஏன் தெரிவிக்கலாகாது?

—தி. ஜ. ர.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088 ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] தை மீ 20உ வெள்ளிக்கிழமை (2—2—1934) [No. 10

வெள்ளை யானைக்குத் தீனி

தனியாப்பசி ஓர் வகை நோய். மனிதருக்குக் காணும் அந்த நோய்க்கு 'யானைத்தீ' என்ற பெயரை மணிமேகலை என்ற நூல் தந்தது. யானைக்கே 'யானைத்தீ' கண்டுவிட்டால் கேட்க வேண்டுமா?

இந்திய இராணுவத்தை 'வெள்ளை யானை' என வருணிப்பது இராஜீய வாதிகள் மரபு. பல வருஷங்களாக இந்திய வரிப் பணத்தை ஏராளமாகத் தின்று கொண்டு இந்த இலாக்கா இருந்து வருகிறது. "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நலத்துக்காகவே இத்தகைய பெரிய இராணுவம் இந்தியாவில் வைக்கப்பட்டிருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் நன்மைக்காக, பதினைந்து தடவை இந்திய இராணுவம் உபயோகிக்கப்படவில்லையா?" என்று அன்று ஒருவர் டெல்லிச் சட்டசபையில் குறிப்பிட்டார்.

அகண்டாகாரமான ஒரு இராணுவத்திற்குத் தண்டத் தீனி போடும் செலவு. இந்திய வரிப் பணத்தைத் தொலை போட்டுக் கொண்டிருக்கிறது. இராணுவத்தில் பெரிய உத்தியோகங்களெல்லாம் இந்தியர்களுக்காவது கிடைக்கின்றனவா வென்றால் அதுவுமில்லை. இந்திய இராணுவத்தின் பெரிய ஸ்தானங்களை அலங்கரிப்பதற்காக டாம், டிக், ஹார்ரிகள் சீமையிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றனர். இந்த அநியாயச் செலவும், அந்நிய மயமும், குறைக்கப்பட வேண்டுமென, பல வருடங்களாகச் சட்டசபையினர் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தியத் துரைத்தனமும் செலவுச் சுமை தாளமாட்டாமல் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் முறையிட்டுக் கொண்டது.

தஞ்சாவூர் சமாராதனைக்குத் தண்ணீர் தர்மம் செய்வதாக ஒப்புக் கொண்டானும் ஓர் தனவான். அத்தகைய பரம தர்மத்தைச் செய்வதற்கு பிரிட்டிஷ் துரைத்தனத்துக்கும் தாராள மனது தோன்றி யிருக்கிறது. கோடி கோடியாகப் பணத்தை விழுங்கும் இராணுவ வெள்ளையானைக்கு இரண்டு கோடி ரூபாயைப் பிரிட்டிஷ் கஜானாவிலிருந்து கொடுத்து விடுவதாகக் கூறி விட்டது 'காபிடேஷன் டிரிபுனல்.' இது எந்தக் கடைவாய்க்குப் போதுமானது என்று கேட்கின்றனர் இந்திய அரசியல் வாதிகள்?

வீட்டில் பசுவும் குழந்தையும் பட்டினி கிடக்கும்போது வீடு காக்கும் நாய்க்குப் பலகாரம் பண்ணிப் போடுவது எந்தக் குடிசையிலும் வழக்கமில்லை. வறுமை அதிகரித்து வரும் இந்தியாவுக்கு இவ்வளவு பெரிய 'தற்காப்பு'ச் சேனை இருப்பதும் அதற்காகச் செலவு செய்வதும் வெட்கக் கேடான விஷயங்கள். ஏகாதிபத்தியத்தின் நன்மைக்காகப் பெரிய இராணுவம் ஒன்று இருக்கவேண்டியது அவசியமானால் அத்தனை சேனையையும் பிரிட்டனுக்குக் கொண்டுபோய்க்குசாலமாய்க்கொழுக்க வைத்துக் கொள்ளட்டும். இந்திய வரிப் பணத்தை இப்படிச் செலவு செய்ய வேண்டியதேயில்லை. இந்தியாவின் க்ஷேமத்துக்காக ஏதேனுமொன்று செய்வதானால் அது இந்திய இராணுவம் என்ற இந்த தண்டச் சோற்றுக் கும்பலை அடியோடு குறைத்துப் போடுவது தான்.

கோடி கோடியாக இந்திய வரிப் பணம் இந்த யானைக்குப் போய்க் கொண்டிருக்கும்போது 'இந்தாருங்கள் இரண்டு கோடி' என்று கஞ்சத்தனமாக, 'காபிடேஷன் டிரிபுனல்' தரும் இந்தக் கொடையைக் கண்டு யார்தான் போற்றுவார்கள்?



—Courtesy: ஹி. டைம்ஸ்.

நமது உலைக்கூடம்

பணமா? ஒட்டாஞ்சல்லியா?

ஜினிவாவிலுள்ள சர்வதேசச் சங்கத்திற்குச் சென்று வோட் செய்வதற்காக, சர்க்கார் தமது செல்லப் பிள்ளைகள் சிலரை வருடா வருடம் அனுப்பி வருகிறது. இந்தச் சங்கத்தின் உறவினால் இந்தியாவுக்குக் காலணா லாபம் கிடையாது. ஆனால் வருஷா வருஷம் சுமார் 10 லட்சம் ரூபாயை இந்தக் காரியத்துக்காக இந்திய சர்க்கார் அள்ளிக் கொடுத்துக்கொண் டிருக்கிறது என்றால் இதை விட அநியாயம் வேறுண்டோ? "1919-ம் வருஷத்திலிருந்து 1932-ம் ஆண்டு வரை 719313 பவுன்கள் இந்திய வரிப் பணத்தினின்று கொடுத்திருக்கிறோம்" என்று அமிருதபஜார் பத்திரிகை சொல்லுகிறது. அதாவது சுமார் ஒரு கோடி ரூபா தண்டச் செலவு. அது ஏழைகளிட மிருந்து வசூல் செய்த வரிப் பணந்தானா, அல்லது டெல்லித் தெருக்களில் கிடக்கும் ஒட்டாஞ்சல்லிகளா வென்று துரைத்தனத்தைக் கேட்கின்றோம்.

"தலை கீழாய் நட"

உத்தரவுக்கு மேல் உத்தரவு பறக்குது. சிட்டகாங் மாஜிஸ்திரேட் மகா மகா பெரியவராக இருக்கிறார். ஒரு வார காலத்துக்கு இளைஞர் வீட்டை விட்டு வெளியே வரலாகாதென்ற உத்தரவு போதாதென்று ஒரு மாத காலத்துக்குப் பத்ரலோகஇளைஞர்கள் தெருக்களில் வரக்கூடாதென உத்தரவை நீட்டியிருக்கின்றாராம். நூற்றுக் கணக்கான பேருக்கு உத்தரவு சாதரா செய்யப்பட்டு விட்டது. இந்த ஒரு மாதம் கழிந்த பிறகு என்ன செய்வாரோ? ஒருவருடம்—பிறகு ஆயுட்காலம் வரை—எந்த இளைஞரும் வெளி வரக்கூடாதென்பாரோ? இதை விட ஒரு உத்தரவு போட்டால், அவர் அரசியலுக்குப் பொருத்தமா யிருக்கும். 'இளைஞர் இனித் தெருவில் போக வேண்டுமானால் தலைகீழாய் ஊர்ந்து சென்றால் அநுமதிக்கப் படுவார்கள்' என்று சொன்னாலும் சொல்வார். ஏனெனில் அப்போதுதான் அவருடைய தலைகீழ் தர்பார் பூர்ணமாயிருக்கும்.

விராட பர்வம்

பாரதத்தில் விராடபர்வம் ஞாபகமிருக்கிறது. பஞ்சபாண்டவர்கள் அப்போது மாறு வேடம் பூண்டு அலைந்தார்கள். அந்த மாதிரி இப்போது ஐந்து பேர்—அஞ்ஞாதவாசமாக வல்ல—இரகஸ்யப் பிரசாரத்துக்காக இங்கிலாந்திலின்று வந்து இந்தியாவில் அலைகின்றார்கள். ஐந்துபேரும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கத்தினர்களென்று 'ராய்ஸ் வீக்லி' சொல்கிறது. புதிய அரசியல் திட்டம் சம்பந்தமாக இங்குள்ள இந்தியப் பிரமுகர்களுக்கு உண்மையான அபிப்பிராயம் என்னவென்பதைக் கண்டறிவதற்காக இப்படி ஐந்து வெள்ளைக்காரர்கள் வந்திருக்கிறார்கள். அங்கு மிங்கும் அலைந்து ஆட்களைக் கண்டு பேசுவார்களாம். இதென்ன மூடு மந்திரம்! பத்துப் பேரைக் கண்டு பேசிய பின்பு இவர்கள் யாரென்ற 'குட்டு' வெளிப் படாமலா போகப் போகிறது? மேன்மையான காரியமாயிருந்தால், அதற்கு ஒடி ஒளிந்து உலவுவானேன்?

மாக்டனால்டின் பீற்றல்

"தற்புகழ்ச்சி, பர நிந்தனை, திரவியாபேட்சை இந்த மூன்று மற்ற எனக்கும் ரண்டணா தட்சிணை; அடுத்தாற்போலுள்ள முட்டாள் ராமசுப்புவுக்கும் ரண்டணா தட்சிணையா" என்றாராம் ஒரு சாஸ்திரிகள். அதே மாதிரியிருக்கிறது பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்சே மாக்டனால்டின் செய்கைகளும். லீட்ஸ் நகரில் ஒரு கூட்டத்தில் தன்னுடைய பிரதாப அரசியலைப் பற்றியும் தன்னைப் பற்றியும் வானமளாவப் புகழ்ந்து கொண்டாராம். "வேலை யில்லாத் திண்டாட்டத்தை இங்கிலாந்தில் இல்லாதவாறு செய்து விட்டேன்" என்று கர்ஜித்தாராம். என்ன நடந்தது தெரியுமா? அதே கூட்டத்தில் வேலை யில்லாத் திண்டாட்டத்தால் வருந்தும் பலர் இருந்தார்களாம். அவர்களெல்லாம் ஞாய் ஞாய் என்று பூனை கத்துவது போலக் கத்திக் கலாட்டா பண்ணினார்களாம். சிலர் மாக்டனால்டை மனம் போனவாறு 'ஆசீர்வாதமும்' செய்தார்களாம். இந்தப் பிரதம மந்திரி இப்படி மூளை மழுங்கித் தற்புகழ்ச்சி கூறிக்கொள்வானேன்? பிறகு கூடை கூடையாக வாங்கிக் கட்டிக் கொள்வானேன்?

கோடையா? குடையா?

1930-ம் வருஷத்தில் 1 ரூபாய்க்கு விற்ற சாமானை 1933-ம் வருஷத்தில் 9 அணாவுக்கு விற்றால் அதைத் தர்மம் என்று சொல்வதா? வியாபார தந்திர மென்பதா? ஜப்பானிலிருந்து இறக்குமதியான குடை யொன்று 1933-ல் ரூ. 1-1-0-க்கு விற்றுக் கொண்டிருந்தது. இடங் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவது வியாபாரிகள் தொழில். அதே மாதிரி ஜப்பானிய வர்த்தகர்களும் சாமானின் விலையைக் குறைத்து ஏராளமாகக் குடைகளைக் கொணர்ந்து, இந்தியாவைப் பந்தல் போடத் துவக்கி விட்டார்கள். வருஷா வருஷம் இறக்குமதியான கணக்கைப் பாருங்கள் :—

வருஷம்	எண்ணிக்கை.
1930—31	4828
1931—32	14908
1932—33	250557
1933—34ல் (அதேமாதம்)	5 லட்சம்.

இப்படி அந்நியச் சாமான் இறக்குமதி யாவதைச் சர்க்கார் பார்த்துக் கொண்டிருந்தால், இந்தியாவில் குடைத் தொழிலை எவனாவது ஆரம்பிக்க முடியுமா?

புளியோதரையும் வருமோ?

ஒழிந்து போகட்டும் ஏதோ சாமான்களைத்தானே திணிக்கிறது ஜப்பான் என்று சும்மா இருந்தோம். பதினைந்து நாட்களுக்கு முன்னே ஜப்பானிலிருந்து ½ லக்ஷம் ஆப்பிள்கள் பம்பாய்த் துறைமுகத்தில் வந்து இறக்குமதியா யிருக்கின்றனவாம். என்ன, தின்னும் பழத்துக்குக்கூடவா அந்நிய நாட்டை எதிர் பார்ப்பது? அட வெட்கக்கேடே! இனிமேல் கோயில் பூஜைக்குப் புளியோதரை கூடத் தயாரித்துப் 'பாக்' பண்ணி அனுப்புவதாக ஜப்பான்காரன் சொல்வான் போலிருக்கிறதே!

நல்லது மகாதேவய்யரே !

சேரமாதேவி குருகுலத்தின் தஸ்தாவேஜுகளோடு ரூபாய் 3000 பணத்தையும், ஆசாரியர் மகாதேவய்யர் மகாத்மாவிடம் கொடுத்து விட்டாரென்ற செய்தி கேட்டுச் சந்தோஷமடைகின்றோம். மேற்படி குருகுலத்துக்காக வசூல் செய்யப்பட்ட பணங்கள் வெளி நாட்டில் சிலரிடத்தில் முடங்கிக் கிடந்ததாகப் பிரஸ்தாபம். அந்தப் பணங்களை வைத்திருப்பவர்களும் மகாதேவய்யர் வழியைப் பின்பற்றி மகாத்மாவிடம் கொடுப்பார்களாக. எப்படியாவது தமிழ் நாட்டினரனைவரும் சேர்ந்து ஓர் ஹரிஜன குருகுலம் ஏற்படுத்துவார்களாயின், அது காலஞ் சென்ற வ. வே. ஸு. அய்யரின் ஆன்மாவுக்குச் சாந்தி தருவதாகும்.

ஒரே பந்தலில் இரண்டு தாலி

சீதம்மா, காந்தம்மா என்ற இரண்டு பெண்களுக்கு ஒரே சமயத்தில் பங்காரி ஜமீன்தாரரின் குமாரர் தாலி கட்டினராம். இந்தத் திருமணத்திற்கு அநேக பெரிய மனிதர்களும் போயிருந்தார்களாம். ஒருவனுக்கு இரண்டு மனைவிகளிருக்க வேண்டுவது அவசியமா என்ன ? "பெண்களை நாம் அடிமைகளாகவும், பொம்மைகளாகவும், போகப் பொருள்களாகவும் நடத்தும் வரையில் நாட்டுக்குக் கதிமோட்சமில்லை" யென்று பண்டித ஜவஹர்லால் சொல்கின்றார். ஆனால், அதே சமயத்தில் ஆந்திர நாட்டில் பணச் செருக்குக் கொண்ட ஒருவர் இரண்டு பெண்களைக் கட்டிக் கொள்கின்றார். என்ன விபரீதம் !

இது வாஸ்தவமா ?

முஸாபர்பூரில் பூகம்பத்தால் ஏற்பட்ட கொடுமைக்கு அஞ்சி அந்த ஊர் ஜனங்கள் நிலைகுலைந்து ஓடின. கடைசியில் துரைத்தனக் கோர்ட்டு நடந்து வந்த காம்பவுண்டு பத்திரமான இடமென நினைத்துத் தங்கி யிருந்தார்களாம். உடனே அவ்விடத்துக்குப் போலீஸ் அதிகாரிகள் வந்து அந்தக் காம்பவுண்டு இராணுவ அதிகாரிகள் தங்கியிருக்க வேண்டுமாதலால், பொது ஜனங்கள் காலி செய்து விடவேண்டுமென்று உத்தரவிட்டார்களாம். இது வாஸ்தவமான செய்தியா யிருந்ததால், இதை விடக் கேவலம் வேறில்லை. ஆபத்தான சமயத்தில்கூட அதிகார தோரணை காட்டும் அதிகாரிகளைக் குள்ள புத்திக்காரர்களென்றுதானே சொல்ல வேண்டும்.

பிடி சம்பளங்களை !

அயர்லாந்தில் சுயேச்சை யரசு ஓர் அரிய காரியத்தைச் செய்யப் போகிறது. அங்குள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைக் குறைப்பதற்காக ஓர் மசோதாவைத் தயாரித்திருக்கின்றார்களாம். 200 பவுன் சம்பளங்களை 5% குறைப்பதென்றும் 1500 பவுனுக்கு மேற்பட்ட சம்பளங்களில் 25% பிடிப்பதென்றும் அம்மசோதா சொல்கிறதாம். இந்தியாவிலோ கொழுத்த சம்பளங்கள் ஏராளமா யிருக்கின்றன ; கேட்பாரில்லை. அயர்லாந்தைப் பார்த்தாவது இந்தியத் துரைத்தனத்துக்குப் புத்தி வரலாகாதா ? கொழுத்த சம்பளங்களைக் குறைத்தால், ஏழை இந்தியனின் வரிச் சுமையை ஓரளவு குறைக்கலாமன்றோ!

காந்திஜி 'ஹிந்து' அல்லவா ?

டெல்லிச் சட்டசபையில் ஆலயப் பிரவேச மசோதா வாக்குவாதத்துக்கு வந்தபோது சில யதாயூர்விகளின் மூளைகள் விதம் விதமாகக் குழம்பிப் போயின. அதில் பண்டித ஸேனர் என்பார், "இந்தப் பிரசாரம் செய்யும் காந்தி என்பவர் ஒரு ஹிந்து அல்ல" என்று கூறினாராம். இந்த நூற்றுண்டில் இதைவிட அபத்தமாக வேறு வசனம் கூறப்பட்டதாக நமக்கு ஞாபகமில்லை. இன்றைக்கு, சரியான ஒரு ஹிந்து—ஸனாதன தர்மம் தழைத்தோங்கவேண்டுமென்பதற்காக உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராயுள்ள ஒரு ஹிந்து—இருப்பாரானால் அவர் மகாத்மா காந்தியே யாவார். மகாத்மா ஹிந்து அல்ல என்று சொல்வது, பண்டித சேனர் மனிதரல்ல என்று சொல்வது போலிருக்கிறது.

அஸெம்பிளி கருடசேவை

—*Courtesy*: ஹி. டைம்ஸ்.

"கடவுள் என்னிடம் வந்து, ஸ்ரீமான் எம். ஸி. ராஜாவைத் தோளில் தூக்கிச்சேல் என்றால், அவ்வாறே தூக்கிச் செல்லுவேன்" என்று அஸெம்பிளியில் ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் பகிரங்கமாய்த் தெரிவித்தார். இதே மாதிரி இன்னும் சில பேருக்கும் அசரீரி கட்டளை கிடைத்தால், எப்பேர்ப்பட்ட கருடசேவைகள் நடக்கும் என்பதைச் சித்திரக்காரர் மேற்காட்டியவாறு கற்பனை செய்திருக்கிறார்.

பூகம்பக் கஷ்ட நிவாரண நிதிக்கு "கட்டைவண்டி"

கர்நாடகமாயு மில்லாமல் நவீனமாயு மில்லாத திரிசங்கு நிலையில் உள்ள தமிழ் நாடக உலகில் 'கட்டைவண்டி' புதிய வழியைக் காட்டுவது. அந்த நாடகத்தைப்பற்றி ஒரு விமரிசனம் சங்கில் வெளியானது ஞாபக மிருக்கலாம். மூன்று வாரங்களுக்குமுன் பிரஸிடென்ஸி காலேஜ் மாணவர்கள் இரு முறை அந்த நாடகத்தைச் சிறப்பாக நடித்துக் காட்டினர்கள். அதே நாடகத்தைக் பெரிய கொட்டகையில் போடுவதற்கு ஏற்பாடாகி யிருப்பது கேட்டுச் சந்தோஷிக்கின்றோம்.

பூகம்பக் கஷ்ட நிவாரண நிதிக்கு உதவு வதற்காக, 'கட்டைவண்டி' சென்னை மிட்லண்ட் தியேட்டரில் அடுத்த 9-ம் தேதியன்று நடைபெறப் போகிறது. மூன்று மணி நேரங்களை வெகு இன்பமாகப் போக்குவதோடு அங்கு வசூலாகும் பணமும் வடக்கே கஷ்டப்படும் நமது சகோதரர்களுக் குப் போகிறதென்றால், அந்த நாடகத் திற்கு அதிகச் சிபார்சு தேவையா?

இது அடக்குமுறை அல்லவா?

வங்காளச் சட்டசபையில் ஓர் கேள்விக்கு விடையளிக்கும்போது ஹோம் மெம்பர் பின்வருமாறு கூறினர்:—"1933ம் வரு டிஸம்பர் மாதக் கணக்கின்படி 1749 பேரை விசாரணை செய்யாமல் காவலில் வைத்திருக்கிறோம். அதில் 766 பேர் ஸ்பெஷல் சிறைகளில் வைக்கப்பட்டிருக்கின்றனர். 624 பேர் சாதாரண ஜெயில்களில் அடைபட்டிருக்கின்றனர். 255 பேர் தங்கள் கிராமத்தை விட்டு வரக்கூடாதென தடுத்திருக்கிறோம். 104 பேர்களை அவர்கள் வீட்டைவிட்டே கிளம்பக் கூடாதென்று சொல்லி யிருக்கிறோம்" என்றார். இவர்களில் ஒருவரையாவது கோர்ட்டில் ஏற்றி என்ன குற்றம் செய்தார்களென்று விசாரிக்கவில்லை. என்றைக்குத்தான் விடுவிக்கப்படுவார்களோ அதுவும் தெரியாது. யாரோ சில ஸி. ஐ. டி.கள் சொன்னதை நம்பி இத்தனைபேரும் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கின்றனர். இது 'அடக்குமுறை' யல்லவா? அந்தப் பதம் பொருத்த மில்லை யென்றால் வேறெந்தப் பதத்தை உபயோகிக்கலாமென்று சர்க்கார் சொல்லட்டும்.

—டிரிபியூன்.

"1923 ஜப்பான் பூகம்பம்"

இந்தப் பெயருடைய ஒரு புத்தகம் இருக்கிறது. அதில் 1923-ல் ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டபோது எப்படி உதவிகள் செய்யப்பட்டன வென்று விவரிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானின் சக்ரவர்த்தி தமது சொந்தப் பணத்திலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாயை எடுத்து உதவி நிதிக்குத் தந்தாராம். ஜப்பானிய துரைத்தனம் 3 கோடி ரூபாய் 'சாங்க்ஷன்' செய்ததாம். பிறகு 5 கோடி செலவு செய்ய நேரிட்டதாம். இராணுவம், கப்பற் படை, போலீஸ் முதலிய இலாக்காக்காரர்கள் எல்லோரும் கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவி செய்ய அனுப்பப் பட்டார்களாம். இராணுவச் சிப்பாய்கள் ஆங்காங்கு இடிந்த கட்டிடங்களிலிருந்து பொருள்களை யெடுக்க ஜனங்களுக்கு உதவினர்களாம். ஸிவில், மிலிடரி எல்லா இலாக்காக்களும் மும்முரமாக உழைத்து ஜனங்களுக்கு உதவி செய்தனவாம். இந்தியாவில் இப்போதேற் பட்டுள்ள இந்த துர்த்தசையின் போது இந்திய இராணுவம் ஜனங்களுக்கு உதவி செய்யப் புறப்படலாகாதா?

கோடம்பாக்கம் கைத்தொழிற் கலாசாலைக்கும் கிராமாபிவிருத்திக்கும் உதவியாக

மகாத்மா காந்தி

அவர்கள் ஆதரவின் கீழ் அவர் முன்னிலையில்

காயனபடு **ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய்**

11—2—34 தேதி மாலை 5-30 மணிக்கு

மிட்லண்ட் தியேட்டரில்

நந்தனார் சரித்திரம்

கதா காலக்ஷேபம் செய்வார்.

டிக்கட் விகிதங்கள்: ரூ. 3, ரூ. 2, ரூ. 1, அணா 8.

ஆர். வேங்கடாச்சாரி, காரியதரிசி.
ஜகன்னாத பக்த ஸபா, எழும்பூர்.

குறிப்பு:—பெண்மணிகளுக்குப் பிரத்யேக இடவசதி யுண்டு.

டிக்கட்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்:—

(1) சுதந்திரச்சங்கு ஆபீஸ், பைக்ராப்ட்ஸ் ரோடு;
(2) காதி வஸ்திராலயம், எஸ்பிளனேடு;
(3) கோயமுத்தூர் கிருஷ்ணய்யர், 29, பைக்ராப்ட்ஸ் ரோடு;
(4) ஜகன்னாத பக்த சபா, எழும்பூர்.



சமாதானம்

(தி. ஜ. ர. எழுதிய சிறு கதை)

ஸரஸாவின் பெயர் மாத்திரமல்ல, அவளுடைய வாழ்க்கை வரலாறே விசித்திரமானதுதான். ஆனால், நமது தேசத்துக்கு, அதிலும் இந்தக் காலத்தில் மட்டிலுமே விசித்திரம் என்று ஒப்புக்கொள்ளுவதில் நமக்கு எவ்வித ஆட்சேபமு மில்லை.

ஸரஸா, ரூபவதி; சொத்துக்காரி; படித்தவள். உயர்ந்த கோஷ்டிகள் என்று சொல்லுகிறார்க ளல்லவா, அவற்றிலெல்லாம் பரிச்சய முடையவள். ஸரஸாவுக்கு நமது ஆசார அனுஷ்டானங்களில் வெகு வெறுப்பு. நம் ஜனங்களைக் கண்டாலே அவளுக்கு வெகு இளக்காரம் என்று கூடச் சொல்லலாம்.

ஸரஸாவின் தகப்பனார் மிகவும் பெரியதோர் பதவியி லிருந்தார். தாய் இவளைப் பெற்றுத் தந்ததோடு, உலக வாழ்வை நீத்துவிட்டாள். பிதாவுக்கு ஸரஸா ஏக புத்திரி. தந்தையின் கல்வி விசாலமும் உள்ள விரிவும், ஸரஸாவின் ஸ்வதந்திர வாழ்க்கைக்கு ஆதார நிலம்; அவருடைய வாஞ்சை, இவளுடைய விசித்திரப் போக்குக்கு ஊட்டம்; தந்தையின் அதிகாரம், செல்வம், தயாளம், சீலகுணம் ஆகியவையோ, ஸரஸாவின் சுயேச்சைக்குக் கவசங்கள். இருபத்தைந்து வயதாகியும் அவள் மணம் செய்து கொள்ளவில்லை!

"ஸரஸீ! தமிழ்நாட்டில் பிறந்தாள்தானே, நீ மணம் செய்துகொள்ளப் பயப்படுகிறாய்?"

தந்தையின் இந்தக் கேள்விக்கு வெகு மிடுக்காகவே ஸரஸி பதில் சொல்வாள்:—"இல்லை, அப்பா! எந்த நாட்டில் பிறந்திருந்தாலும், நான் மணம் செய்துகொள்ள மாட்டேன்."

"ஏனோ?"

"எனக்குப் பதில் சொல்லத் தெரியாது."

தகப்பனார் பெருமூச்சு விடுவார்.

ஆனால், ஸரஸாவுக்கு, எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது. அவள் யாருடனும் சிறிதுகூடக் கூச்சமின்றிக் கலகலப்பாய்ப் பழகுவாள். வாலிபர்கள் அவள் அழகைப் பற்றி, அவள் இல்லாத இடத்தில் வர்ணிப்பதுண்டு. நேரில் இருக்கும்பொழுது, அவளுக்கு அழகு உண்டா என்பதைக்கூட அவர்கள் மறந்து விடுவார்கள். அவள் பெரு நெருப்பு. எந்தக் கோஷ்டியில் அவள் பிரசன்னமா யிருந்தாலும், கோஷ்டியிலுள்ளோர் யாவருக்கும் சந்தோஷந்தான்; ஆனால், எல்லோரும், தாங்கள் அவளுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவே, உள்ளூர ஒருவித உணர்ச்சி கொண் டிருப்பார்கள்.

சங்கீதம் என்றால், அவளுக்கு வெகு பைத்தியம். தேவகான சபையின் சங்கீதப் போட்டியில் அவளும் கலந்து கொள்ளுவதாக விண்ணப்பம் செய்திருந்தாள். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதார்களின் ஜாபிதா வந்து சேர்ந்தது. கடைசிப் பெயர் யாரோ ராமசுப்பு என்றிருந்தது; அதற்கு முந்திய பெயர் தன்னுடையது. பெயர் பொறுக்கி யெடுக்கப்பட்டதில் சந்தோஷங் கொண்டாளாயினும், தன் பெயர் முதலில் இருந்திருக்க வேண்டும் அல்லது எல்லாவற்றிற்கும் கடைசியி லிருக்கவேண்டும் என்று மாத்திரம் ஏதோ சற்று அதிருப்தி கொண்டாள். இதற்கெல்லாம் அர்த்தம் கிடையாது என்பது அவளுக்குந்தான் தெரியும். என்றாலும், மனத்தின் எண்ணமெல்லாம் காரணகாரிய ஆராய்ச்சிகளுக்கு உட்படுகின்றனவா?

போட்டித் தேதியும், நேரமும், வந்து சேர்ந்தன. தொழிலாய் வைத்துக் கொள்ளாமல், ஆசையால் கற்றுக் கொண்டவருக்கு மாத்திரம்தான் போட்டி. ஆனாலும், பல பிரபல வித்வான்கள் வந்திருந்தார்கள். முதல் வரிசையில் போட்டி "நீதிபதிகள்" உட்கார்ந்திருந்தார்கள். பின் வரிசைகளில் பொறுக்கி யெடுத்த ரஸிகர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பெரிய கூட்டம் இல்லை.

மேடையில் இரண்டு பக்கத்திலும் போட்டி அபேட்சகரும் அவர்களுக்கு உதவிக்கு வந்தவர்களும் உட்கார்ந்திருந்தார்கள். சதஸுக்கு ரஞ்சிதமாயிருப்பதற்காக, ஒவ்வொரு விண்ணப்பதாருக்கும் வெவ்வேறு கிருதிகள் குறிப்பிடப்பட் டிருந்தன. அவையெல்லாம் விண்ணப்பதார்களின் விருப்பத்தைக் கேட்டுத் தயாரித்து, அவர்களது அங்கீகாரத்தையும் பெற்றவை.

மேடையின் நடுமத்தியில் ஒரு உயர்ந்த பீடம் போடப்பட் டிருந்தது. அதில் வந்து அமர்ந்தே ஒவ்வொருவரும் தம் வித்வத் திறமையைக் காட்டவேண்டும்.

பரீட்சையும் ஆரம்ப மாயிற்று. மொத்தம் பன்னிரண்டு அபேட்சகர்கள்தான். ஸரஸா மாத்திரமல்ல; வேறு இரண்டு பெண்களு மிருந்தார்கள். வீணை, பிடில், புல்லாங்குழல் ஆகிய மூன்று வித வாத்யங்களில் ஒன்று வாசிக்கத் தெரிந்தவர் பத்துப் பேர். இரண்டு பேர் வாய்ப் பாட்டு மட்டில் பாடக்கூடியவர்.

முதல் பத்துப் பேரும் நன்றாய்த்தான் சங்கீதம் பொழிந்தார்கள். அநேகமாகக் கரகோஷம் வாங்காதவரே கிடையாது. ஆனால், அதையெல்லாம் நாம் வர்ணித்துக்கொண் டிருக்க முடியாது.

ஸரஸாவின் முறை வந்தபொழுது, சிறியதொரு பிடிலைக் கையில் பிடித்து, கம்பீரமாக உயர்ந்த பீடத்துக்கு வந்து சேர்ந்தாள். வெகு அநாயாசமாக உட்கார்ந்தாள். நெளித்த புருவத்துடன், இரண்டொரு விநாடியில் சுருதி சேர்த்துவிட்டு, மிருதங்கக்காரரை உறுத்து விழித்தாள். "ஆகிவிட்டதம்மா" என்று சொல்லுவது போல் அவர் தலை அசைந்தது. தடதடவென்று வில்லை பிழுத்து. அடாணா ராகத்தை எடுத்து, சில நிமிஷ நேரம் ஆலாபனை செய்தாள். அதிலேயே ஒரு கிருதியை வாசித்தாள். மொத்தம் எட்டு நிமிஷ நேரம்தான் அவள் வாசித்தது. சோனாமாரி பொழிவது போலப் பொழிந்து, சதஸ் முழுவதும் எல்லார் நரம்புகளும் கம்பீர ஜன்னி பிடித்தது போல் துடி துடிக்கும்படி செய்துவிட்டாள். அவள் கைப்பிடித்த வாத்தியத்தின் நரம்புகளில் ஏற்பட்ட அதிர்ச்சிகள், மனித நரம்புகளைத் தாக்கும் அதிசய ரேடியோ அலைகளோ என்றுதான் சொல்லவேண்டும். அப்படி யிருந்தது அவளுடைய கானம்! ஆனால், அவள் வாய் திறந்து பாடவில்லை. பாட்டு முடிந்தது; சரேலென்று, ஒரு விநாடி கூடத் தாமதியாமல், அம்புபோல் பறந்து தனது பழைய இருக்கையை

அடைந்தாள். யாரும் கரகோஷம் செய்யவில்லை; மறந்து போய் விட்டார்கள்.

இவளுடைய ஸ்தானத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மனிதனையும், இவளையும் ஒவ்வொருவரும் மாறி மாறிப் பார்த்தார்கள். அவன் வெகு பதவிசாக உட்கார்ந்து கொண்டிருந்தான்; பரம சாந்தம். "ஏது! அவன் கடைசியில் வாசிப்பது திருஷ்டி பரிகாரமாகத்தான் இருக்கும்" என்று சில வித்வான்கள் காதோடு காது பேசிக் கொண்டார்கள்.

"அடுத்தபடி ஸ்ரீமான் ராமசுப்பு தோடி ராகத்தில் ஒரு தியாகர்வாள் கிருதியைப் பிடிலில் வாசிப்பார்" என்று சபையின் காரியதரிசி உரக்கச் சொன்னார்.

ராமசுப்பு மெதுவாக எழுந்து நின்று, "இல்லை; என் பிடிலின் தந்திகள் அறுந்து போயின. மன்னிக்க வேண்டும்" என்று, வெகு அமைதியாகக் கூறினான்.

பக்கத்தில் இருந்த ராமசுப்புவின் தோழன் மெதுவான குரலில் "இல்லை, ராமு! தந்திகள் நன்றாயிருக்கின்றனவே" என்றான்.

"முட்டாள்! வாத்தியத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்? பேசாமலிரு" என்று நண்பனை வாயடைத்தான் ராமு. இந்தச் சம்பாஷணை மிக மெல்லிய குரலில்தான் நடைபெற்றது. என்றாலும், ஸரஸாவின் செவிகளில் விழாமலில்லை.

வேறு பிடிலில் வாசிக்கலாமென்று நீதிபதிகளும் காரியதரிசியும் யோசனை சொன்னார்கள்.

"பழக்கமில்லா வாத்தியத்தில் வாசித்து அவமானப்பட முடியாது" என்று ராமசுப்பு கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான்.

இதற்கு மேல் வற்புறுத்த யாருக்கும் இஷ்டமில்லை. "அருமையான சங்கீதத்தைக் கேட்டு, இன்னும் விறுவிறுப்புடன் இருந்தவரும் காதுகள் செய்த புண்ணியந்தான் இது" என்று கூடச் சிலர் பேசிக்கொண்டார்கள்.

பிறகு நீதிபதிகளின் தீர்ப்புப்படி, முதல் பரிசான தங்கப் பதக்கம் ஸரஸாவுக்கு அளிக்கப்பட்டது. அவளுக்கு என்னவோ பூரண திருப்தி யில்லை. ராமசுப்புவைப் பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டே, அப் பதக்கத்தை இரு கரங்களாலும் வாங்கித் தோழியிடம் கொடுத்தாள்.

இந்த வித்வத் பரீட்சை நடந்து ஒரு வாரம் கழிந்தது. ஸரஸா ஒரு வீதி வழியே நடந்து சென்று கொண்டிருந்தாள். ஒரு சிறிய வீட்டு அறைக்குள் ராமசுப்பு உட்கார்ந்திருப்பதை ஜன்னல் வழியாய்க் கண்டாள். என்னவோ அவனைக் கூப்பிட்டுப் பேச வேண்டுமென்று தோன்றிற்று. ஆனாலும், மனத்தை ஒரு திருப்புத் திருப்பியதும், கால்கள் தாமாக நடக்கலாயின. என்றாலும், அவளையும் அறியாமலே ஒரு வழக்கம் மட்டில் அவளுக்கு உண்டாயிற்று. ஏறக்குறையத் தினந்தோறும் அந்த வீதி வழியாகவே மாலை நேரத்தில் நடக்கலானாள். காரியம் மட்டில் ஒன்றும் கிடையாது. அவனைச் சந்தித்துப் பேசவேண்டும் என்ற எண்ணம் அதற்கப்புறம் உண்டாகவே யில்லை. பத்துப் பதினைந்து தினங்கள் இவள் அங்கு நடந்தும் ராமசுப்பு இவளைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

வழக்கம்போல ஸரஸா நடந்து கொண்டிருக்கிறாள். 'நண்டுக்கும் நரிக்கும் கல்யாணம்' என்று குழந்தைகள் கத்திக்கொண்டு ஓடின. ஏனெனில், இரண்டு தூற்றல் விழுந்தபின் மண் மணத்து, மஞ்சள் வெயில் வீசிக் கொண்டிருந்தது. ஒரு பிடிலினின்று 'ஜிலு ஜிலு'வென்று ஒரு அருமையான ராகம் இழைக்கப்பட்டு, ஆகாயத்தை நிறைத்தது. ஸரஸா சற்று நேரம் ஸ்தம்பித்து நின்றாள். ராமசுப்பு வீட்டு ஜன்னல் வழியாகத்தான் வருகிறது அந்தத் தேவ கானம்! பிறகு ஒரு கிருதி; பின்னால் ஒரு அற்புதமான பதம். இவற்றிற்கு மேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. ராமசுப்புவைப் பார்க்கவும் அவளுக்குத் தைரியம் வரவில்லை. அவனையறியாமலே போகவேண்டி, விரைவாக வீட்டுக்கு நடந்தாள்.

என்றாலும், மறுநாள் ஸரஸா தனது இயற்கையான கம்பீரத்துடன் அந்த வீட்டு வாயிற்படியில் வந்து நின்று, "ராமசுப்பு இருக்கிறாரா?" என்று வினவினாள்.

"யார்?" என்று கேட்டுக் கொண்டே வந்த ராமசுப்பு, இவளைக் கண்டதும் சிறிது மலைவுற்றான். அதை வெளிக் காட்டாமல், "வாருங்கள், அம்மா! தாங்கள்—தாங்கள்—அன்று தங்கப் பதக்கம் பரிசு பெற்றவர்களல்லவா?" என்றான்.

ஸரஸா மிகவும் படபடப்புடன், "ஆமாம். அந்தப் பதக்கத்துக்காகத்தான் இங்கு வந்தேன். இதோ இருக்கிறது அந்தப் பதக்கம்" என்று, கையில் தொங்கிக் கொண்டிருந்த பையினின்றும், ஒரு பதக்கத்தை எடுத்து நீட்டினாள்.

ராமசுப்பு அதை ஏறெடுத்தும் பாராமல், "பதக்கத்தில் ஏதாவது சூது இருக்குமானால், அதற்கு நான் எவ்விதத்தும் பொறுப்பாளி யல்லவே" என்றான்.

"நானும் பொறுப்பாளி யல்ல; அதைப் பற்றி எனக்குக் கவலையுமில்லை" என்று சிறிது கேலி கலந்த தொனியுடன் சொன்ன ஸரஸா "இது நேற்று அற்புதமாய்ப் பிடில் வாசித்த மனிதருக்குச் சொந்தம்; எனக்குச் சொந்தமல்ல" என்றாள்.

"ஓ! அப்படியா? மனமொப்பி உழைக்காது இலவசமாய் வரும் தான தர்மங்களை ஏற்றுக்கொள்ளும் வழக்கம் எனக்குக் கிடையாது" என்றான் ராமசுப்பு.

சற்றுத் தர்க்கம் வளர்ந்தது. தன்னை விடப் பிடிவாதம் உடைய, தன்னோடும் தர்க்கம் செய்யக்கூடிய, ஒரு வாலிபன் உலகத்திலிருக்கிறான் என்பதை அப்பொழுது கண்டுபிடித்தாள் ஸரஸா.

பதக்கத்தை அவன் வாங்கிக் கொள்ளவில்லை. ஆனால், அன்று இருவருக்கும் ஏற்பட்ட நேசம் தொடர்ந்தது. அடிக்கடி இருவரும் சந்தித்தார்கள்; ஒருவரை ஒருவர் பார்க் சென்றார்கள்.

பல நாள் கழிந்து, நட்புப் பலமடைந்த பிறகு, ஒரு நாள் இருவரும் ராமசுப்புவின் அறையிலேயே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

"ராமு! உங்களுடன் நெருங்கிப் பேசிக் கொண்டிருந்தாலும், வெகு நாளாக உங்களிடம் எனக்கு ஒரு சந்தேகம். அது என் மனத்தை வருத்திக் கொண்டேயிருக்கிறது. உண்மையைச் சொல்லாத உதட்டுறவு எதற்கு?" என்றாள் ஸரஸா.

"குற்றப் பத்திரிகை யார் மீதோ?" என்றான் ராமு.

"உங்கள் மீதுதான். உண்மையில் அன்று உங்கள் பிடில் தந்தி அறுந்து போகவில்லை. எனக்காக—எனக்குப் பரிசு கிடைக்கட்டுமே என்ற தாட்

சண்யம் ஏற்பட்டதால், பொய் சொன்னீர்கள் என்றே தோன்றுகிறது."

"அப்படியு மிருக்கலாம்; உங்கள் அற்புதப் பாடலைக் கேட்டு அதைர்யம் ஏற்பட்டு மிருக்கலாம்."

"இருக்கலாம், போகலாம், வரலாம் எல்லாம் வேண்டாம். நிஜம் என்ன?"

"உங்கள் இஷ்டப்படி வைத்துக் கொள்ளுங்கள்."

"அவ்வாறானால், பதக்கம் யாருக்குச் சொந்தம்?"

ஸரஸாவின் முகத்தை ஒளி ஜொலித்த கண்களுடன் உற்று நோக்கிய ராமசுப்பு, "இருவருக்கும் இஷ்டமானால், இருவருக்கும் சொந்தமாக்கிக்கொண்டு, சமாதானமாகலாம்" என்றான்.

ஸரஸா அன்றுதான் முதல் தடவை தலை குனிந்தாள். முகத்தில் ஒரு புதுத் தினிசுப் புன்னகை. "எனக்கு ஒன்றும் அதில் ஆட்சேபனை யில்லை" என்றாள்.

ஒளியின் ஜாலம்

("மாயா எழுதியது")

ஆமாம்! உமக்குப் பிடிக்காது; உமக்குப் பிடிக்காதென்று நான்தான் கண்டிப்பாய்ச் சொல்லுகிறேனே. அப்புறம் ஏன் படிக்கிறீர்? இனிமேல் படித்தீரானால் நான் ஜவாப்தாரி யில்லை. காதல்தான் ஜப்பான் சரக்கு மாதிரி எங்கு பார்த்தாலும் தொட்டி யிறைகிறதே. நாவலிலே காதல், ஸினிமாவிலே காதல், பத்திரிகையிலே காதல், நாடகத்திலே காதல், கிராமபோன் பிளேட்டிலே காதல், கடைத் தெருவிலே காதல், கடற்கரையிலே காதல்—இப்படிக் காதல் ஏகமாக மலிந்துவிட்டது. உமக்கே இப்பொழுது காதல் கசந்து போய்விட்டது; அல்லது அலுத்துப் போய்விட்டது என்றுதான் வைத்துக் கொள்ளுமே. அப்படியிருக்க, இந்தக் காதல் பித்தனின் உளறல் உமக்குப் பிடிக்குமா? என் துக்கத்தை நான் என்னவோ கிறுக்கிக்கொண் டிருக்கிறேன். அதில் நீர் ஏன் தலையை நுழைத்துக்கொள்ளுகிறீர்?

ஒருமணி நேரத்துக்கு முன்தான் அவளைப் பார்த்தேன். சந்தேகமேயில்லை. அந்தப் புன்னகை அவளைத் தவிர வேறு யாருக்கு வரும்? அது பொய்யாமே! முழு மோசமாயிருக்கிறறதே! இந்த ரஸ்ஸலை நான் ஏன் இப்பொழுது படித்தேன்? இவர் பெரும் போடாய்ப் போடுகிறாரே. என்னவோ ஸயின்ஸாம்! அது என்ன மனிதனை அடியோடு அசடாக்குகிறதே! இந்த ரஸ்ஸல் என்ன சொல்லுகிறார்? எங்கே, இன்னொரு தடவை படித்துப் பார்க்கிறேன்.

"சூரியனிடமிருந்து புறப்பட்ட ஒளிக் கிரணங்கள் விநாடிக்கு (சகிண்டுக்கு) 186,000 மைல் வேகத்தில் பூலோகத்துக்கு வருகின்றன."

குசாலாய் வரட்டும், ராஜா மாதிரி வரட்டும்; யார் வேண்டாமென்கிறார்கள்?

"அந்தக் கிரணங்களில் சில நீ பார்த்த பேர்வழியை வந்து தொட்டன."

இதுதான் விஷமம். இந்தக் கிரணங்களுக்கு என்ன கேடுகாலம் என்று கேட்கிறேன். இருக்கட்டும்; அப்புறம்?

"ஒரு ரூபத்தின்மீது பட்டதால், கிரணங்கள் வக்கிரமாய்த் திரும்பின."

ஊஹும்! அதென்னவோ; இதெல்லாம் விந்தையாகத்தா னிருக்கிறது.

மிஸ்டர் ரஸ்ஸல் அவர்களே! மேலே என்ன சொல்லப் போகிறீர், பார்க்கலாம்.

"அப்படித் திரும்பிய கிரணங்களில் சில உன் கண்ணில் வந்து தாக்கலாயின."

ரொம்ப சரி; பிறகு?

"சில நுட்பமான நரம்புகள் அந்த அதிர்ச்சியை மூளைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தன. அங்கே ஒரு 'ஈவெண்ட்' (அதாவது சம்பவம்) நிகழ்ந்தது."

வாசக நண்பரே! இந்தத் துர்ப்பாக்கியசாலியின் வருத்தத்தில் உமக்கு இவ்வளவு சந்தோஷமா? இன்னும் படிக்கிறீரா? அவ்வாறானால், நீரே பாரும்; ரஸ்ஸல் இன்னும் என்ன சொல்லுகிறார்:-"இப்பொழுதாவது தெரிகிறதா, நீ பார்த்ததாக நினைத்துக் கொண்டிருக்கும் பேர்வழியை நீ பார்க்கவில்லை யென்பது? அவரை நீ பார்க்கவே யில்லை. அவர் மேல்பட்ட சில கிரணங்கள்தான் திரும்பி உன் கண்ணில் வந்து பட்டன. உன் கண்ணுக்கும் அவருக்கும் எவ்வித சம்பந்தமும் ஏற்படவே யில்லை. அவர்—உண்மையான அவர்—காணாமற்போன தன் குடையைப் பற்றியோ நாளைக்குக் கற்றுக்கொள்ள வேண்டிய கீர்த்தனங்களைப் பற்றியோ எதைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தாரோ! யார் கண்டார்? விஷயம் இப்படியிருக்க, நீ அவரைப் பார்த்ததாகச் சொல்லுவது என்னவா யிருக்கிறது, தெரியுமா? யாரோ ஒருவன் ஒரு பந்தை விட்டெறிகிறான். அது ஒரு சுவரில் போய் மோதுகிறது. அந்த வேகத்தால் பந்து திரும்பி உன்மேல் வந்து விழுகிறது. இதனால், சுவர் ஓடி வந்து உன்னைத் தாக்கிற்று என்றோ நீ சுவர்மீது மோதினாய் என்றோ சொல்லலாமோ? இந்த மாதிரிதான் இருக்கிறது, நீ அவரைப் பார்த்ததாக நினைத்துக்கொண்டிருப்பதும்."

எனது நண்பரே! உம்மைத்தான், வாசகரே! இவ்வளவு பொறுமையாகப் படிக்கும் உம்மிடம் சொல்லாமல் வேறு யாரிடம் போய் நான் என் துக்கத்தைச் சொல்லி ஆற்றிக்கொள்ளப் போகிறேன்? ரஸ்ஸல் சொல்லுவது வாஸ்தவமா? நான் என் காதல் கிழத்தியை உண்மையிலேயே பார்க்க வில்லையா? இவர் சொல்லுவது நிஜமானால், நான் இனிமேலும் ஒருபோதும் அவளைப் பார்க்கவே முடியாது போலிருக்கிறதே. எத்தனையோ பேர், கண்டதும் காதல் உண்டாகி விடுகிறதாய்ச் சொல்லுகிறார்கள்; இந்தப் பேர்வழியோ, கண்டதே பொய் என்று வம்பு செய்கிறாரே! இதென்ன ஆபத்துக்கோ! என் பரிதாப நிலைமையைக் கண்டு இப்பொழுது உமக்கு அழுகை வருகிறதல்லவா?

விவாஹத்திற்கு

ரூ. 1000

உங்களுக்கு வேண்டுமா?

விவரங்களுக்கு எமக்கெழுதவும்:—

கலியாண உதவி நிதி,

589, பைகிராப்ட்ஸ் ரோட்,

மதராஸ்.

பொதுச் சொத்தும் தனிச் சொத்தும்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

இரண்டுவித ஆசைகள் மனிதனுக்கு இருக்கின்றன. ஒன்று, பொதுஜனங்களுக்குச் சேவை செய்யவேண்டும், பொது உபயோகத்துக்கு ஒரு அழகான பொருளைச் சிருஷ்டித்துவிட வேண்டும் என்னும் ஆசை. இன்னொன்று, தனது சொந்த உபயோகத்துக்காகப் பணம் சேர்க்கவேண்டுமென்ற ஆசை. இரண்டாவது சொன்ன ஆசையைவிட முதலிற் சொன்ன ஆசை அதிக பலமானது என்றுகூடச் சொல்லலாம்; இல்லையானால், அதற்குச் சமமாகவாவது இருக்கும். சொந்தத்துக்குக் கட்டப்படும் வீட்டைவிட, ஒரு ஆலயத்தைத்தான் அதிக கவனஞ்செலுத்திக் கட்டி, பற்பல வகைகளில் அழகு படுத்துவீர்கள். எனவே, என்ன ஏற்படுகிறது? எல்லாச் சொத்தும் தேசத்தின் பொது உடைமையாகி விட்டால், அவற்றின் பரிபாலனத்தில் கவனக்குறைவு உண்டாகி விடாது என்று நிச்சயமாகிறது. தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை உண்டு என்ற எண்ணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அடியோடு மறந்து விடுவோம். அவ்வாறு மறந்தோமானால் ஏமாற்று, மோசடி, தஸ்கரம் முதலிய தீமைகளும் சிறிது சிறிதாய்க் குறைந்து, இறுதியில் மறைந்தே போகும். சொந்தத்துக்குச் சொத்துச் சேர்க்க வேண்டும் என்ற ஆசை இருப்பதால்தான் இந்தக் கெட்ட காரியங்கள் நடக்கின்றன.

சொத்தை நீங்களும் தனியாய் வைத்துக்கொண்டு அனுபவிக்க முடியாது; உங்கள் பிள்ளை, குட்டி, பேரன், பேத்திகளுக்கும் சேர்த்துவைக்க முடியாது — இவ்வாறிருக்குமானால், ஏராளமாய்ச் சொத்தைக் குவித்துவிட வேண்டுமென்ற ஆசை தோன்றாது. சொத்தை நீங்கள் நிறையவோ நீண்டகாலத்துக்கோ வைத்துக் கொண்டிருக்க முடியாதென்றால், பிறரை மோசம் செய்ய வேண்டுமென்ற இச்சையும் உண்டாகாது. ஆகையால் சொத்தையெல்லாம் பொது உடைமையாக்கிவிடவேண்டும். தனி மனிதர் சொத்து வைத்திருந்த பழைய ஞாபகத்தால், சில இச்சைகள் ஆரம்பத்தில் கொஞ்சம் கொஞ்சம் இருந்துவரும். ஆனால், காலக்கிரமத்தில் அவை தேய்ந்து மாயும்; பொது லாபம்தான் உங்கள் நோக்கமாகிவிடும். ஒரு பக்கத்தில் தனி மனிதர்கள் சொத்தும், இன்னோர் பக்கத்தில் பொதுச் சொத்தும் இருந்துவந்தால், பொதுச் சொத்தில் சற்றுக் கவனக்குறைவு ஏற்படலாம். ஆனால், எல்லாம் பொது உடைமை ஆகிவிட்டால், உங்களுடைய பூராக் கவனத்தையும் அதன்மீதுதான் செலுத்துவீர்கள்; உங்கள் மனோபாவமே மாறுதலடைந்துவிடும்.

பொது உடைமை ராஜ்யத்தில், பொதுச்சொத்துக்களைச் சிறிதுசிறிது காலத்துக்குத்தான் தனி மனிதர்கள் நிர்வாகம் செய்வார்கள் என்றும் நாம் நினைத்துவிட வேண்டியதில்லை. ஒரு குத்தகைதார், பத்து, இருபது அல்லது முப்பது வருஷங்கள் ஒரு நிலத்தில் பயிர் செய்யலாகாதா? செய்யலாம்; ஆனால், அது அவனுக்குச் சொந்தமாக மட்டும் ஆகிவிடாது. ஆகையால், பொது உடைமையில் நிலம் செழிப்பிழந்து போய்விடுமோ என்று அஞ்ச வேண்டியதில்லை.

இருவகை ஜீவராசிகள் இருக்கின்றன. புலியும் பூனையும் ஒருவகை; அவை தன் தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு ஏகாந்தமாய் வாழ்கின்றன. தேனீயும் எறும்பும் மற்றோர் வகை; இவை கூட்டமாக வாழ்ந்து, ஐக்யமாய் வேலை செய்கின்றன. கூட்டம் முழுவதற்கும் உபயோகமாக, தேனையும் தானியத்தையும் சேர்த்து வைக்கின்றன. எறும்பு சமாஜத்தில் ஒவ்வொரு எறும்பும் பொது ஊழியனாயிருக்கின்றது. ஆனால், புலியோ, பூனையோ, நாயோ பொது ஊழியனல்ல; தன்தன் வயிற்றுப் பாட்டைத் தானே தீர்த்துக் கொள்ளுகின்றது. எறும்புகள் போர் வீரர்களைப்போல் அணிவகுத்துச் செல்லுவதைக் கவனியுங்கள். ஒன்றுக்குப் பின் ஒன்று தானியத்தை எடுத்துச் செல்லுகின்றன; ஒரு எறும்புகூட வரிசையை விட்டு விலகுவதில்லை. தேனீக்களைப் பார்ப்போம். ராணித்தேனீ கூண்டில் முட்டைகளை இடுகின்றது. மழை வரும்போலிருந்தால், எல்லா ஈக்களும் அந்த முட்டைகளை வேறு பத்திரமான இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. அந்தந்த ஈ தூக்கிச் செல்லும் முட்டை அதற்குச் சொந்தமென்று நினைத்துவிடவேண்டாம். எல்லா முட்டையும் முழுக் கூட்டத்துக்குமே சொந்தம். தேனீக்களுக்கு ராணிகள், வேலைக்காரர்கள், போர் வீரர்கள் எல்லாம் உண்டு. தேனீக்களிலும் சரி, எறும்புகளிலும் சரி, ஏதாவது ஒன்று தனித்துவாழ இச்சை கொள்ளுமானால், ஈர இரக்கமின்றி மற்றவை அதைக் கொன்றுவிடுகின்றன.

இவ்விஷயத்தில் மனிதன், தேனீ, எறும்பு இந்த வகையைச் சேர்ந்தவன். ஐக்கியமாக வாழ்வதுதான் அவன் இயல்பு. ஆனால் அந்த இயல்புக்கு ஏற்றபடி, ஈவிரக்கமின்றிக் கண்டிப்பான முறையில், மனிதன் தனது ஸ்தாபனங்களை வளர்த்துக்கொள்ளவில்லை. ஒருபுறம் தனி மனிதர்களுக்குச் சொந்தமான சொத்து, மறுபுறம் பொதுச் சொத்து இப்படிக் கதம்பமாயிருந்து வரும் ஏற்பாடு திருப்திகரமாயில்லை. தனி மனிதர்கள் சொத்துக்களில் ஒருவருக்கு அதிகம் ஒருவருக்குக் கொஞ்சம் என்ற ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. இந்த ஏற்றத் தாழ்வுகளின் பலனாக வறுமை, குற்றம், கலகம் முதலியன வலுத்திருக்கின்றன. இத் தீமைகளைக் கண்டு, மனிதர்கள் யோசிக்கலாயினர். உலக ஜனங்களின் முன்னே, பொது உடைமை இலட்சியம் தோன்றி, நிலைத்துவிட்டது.

[இது Chats Behiud Bars என்ற ஆங்கிலப் புத்தகத்தினின்றும் எடுக்கப்பட்டது.]



வேலையற்ற யந்திரங்கள்

(பெர்னாட் ஷா)

[பெர்னார்ட்ஷா ஓர் ஆங்கிலப் பேராசிரியர் என்பது நண்பர்களுக்குத் தெரிந்திருக்கும். அவருடைய வார்த்தைகள் சுருக்குச் சுருக்கென்று மனத்தில் தைக்கும்; தமாஷாகத் தோன்றும். ஆனால் ஆழ்ந்த கருத்துக் கொண்டவை. கீழே அவருடைய பிரசங்கமொன்றின் ஒரு பகுதி மொழிபெயர்த்துத் தரப்பட்டிருக்கின்றது.]

பார்லிமெண்டைப்பற்றிய ஒரு ரகசியத்தை நாம் கண்டு பிடித்துவிட்டோம். பார்லிமெண்டு இணையற்றதோர் அருமையான யந்திரம்; ஒரு வேலையும் நடக்காதபடி பார்த்துக் கொள்ளுவதற்காக ஏற்பட்டது. ஏனெனில், கட்சிப் பிரதி கட்சிகளைக் கொண்டுதானே அந்த யந்திரம் அமைகின்றது! சரித்திர ரீதியாக அதன் வரலாற்றைப் பாருங்கள். ஜனங்கள் ஒரு ஆளுகைக்கு உட்படவேண்டும். ஆனால், அந்த ஆளுகை நடக்காமல் தடுப்பதற்காகவே பிறந்த ஒரு கருவிதான் பார்லிமெண்டு என்பது.

முன்னேறும் முயற்சியை யெல்லாம் தடுப்பது லண்டன் பார்லிமெண்டு மாத்திரமல்ல; ஜெனிவாவிலுள்ள சர்வ தேசப் பார்லிமெண்டும் இப்படிப்பட்டதுதான். அதுவும் ஜனநாயக முறையிலே அமைந்த சபைதானாம். ஒரு தேசம் ஏதாவது செய்யவேண்டுமென்று தனது பிரதிநிதியை ஜெனிவாவுக்கு அனுப்பினால், உடனே அடுத்த தேசம் அவனைத் தடுப்பதற்காகத் தனது பிரதிநிதி ஒருவனை அனுப்பி விடுகிறது. அங்குக் கூடியிருப்பவர்களெல்லாம், ஒருவனுக் கொருவன் தடங்கல் புரிவதற்காகவே கூடியிருக்கிறார்கள்.

வேலை ஒன்றுந்தான் நடக்கவில்லையே என்று கசந்து கைவிடுகிறார்களா? அதெல்லாம் இல்லை. என்ன வேடிக்கையா யிருக்கிறது, அவர்களெல்லாம் பழுத்த ஜனநாயக வாதிகளல்லவா! அவர்கள் ஆயுதப் பரிகரணக் கமிட்டியில் அங்கம் வகிக்கிறார்கள். அதில் அவர்களுக்கு ரொம்ப சந்தோஷம்.

எது வரையில் ஒரு காரியமும் அக்கமிட்டியால் நடக்காது என்ற நிச்சயம் இருந்து வருகிறதோ அதுவரையில் அதில் உட்கார்ந்திருக்க அவர்களுக்கு என்னதடை?

அவர்கள் எல்லாருக்கும் அந்த ரங்கம் தெரியும்; எந்த வல்லரசும் தனது படையைக் குறைக்க இஷ்டப்படவே யில்லை என்று அவர் யாவருக்கும் தெரியும்.

ஆயுதப்பரிகரணம் வேண்டுமென்று அவர்கள் பாசாங்குதான் செய்கிறார்களா, என்ன? கிடையாதே. ஆயுதங்களைக் கொஞ்சம் மலிவாக்கிக் கொண்டால் தேவலை என்றுதான் ஒருவருக்கொருவர் நாஜூக்காய்த் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். “நல்லது, மிஸ்டர். 16 அங்குலக் குண்டு ரொம்பக் கிராக்கியாயிருக்கிறதே; 10 அங்குலக் குண்டு மலிவா யிருக்கிறது. இனிமேல் 10 அங்குலக் குண்டைக் கொண்டே தங்களைச் சுடுகிறோமே; அதில் ஒன்றும் தங்களுக்கு ஆட்சேப மில்லையே” என்றுதான் ஒருவரை ஒருவர் வினவுகிறார்கள். இதுவரை ஆயுதப் பரிகரணம் சாதித்ததெல்லாம் இந்த மாதிரி லாபங்கள் தான்.

ஆயுதப் பரிகரண மகாநாடு இது வரையில் கலையாமல் நடந்து வருவதன் ரகசியமென்ன, தெரியுமா? அது அருமையான ஜன நாயக அமைப்பு. அதனால் ஒன்றும் நடவாது; அது ஒன்றும் செய்யப் போவதில்லை. இதனால் தான் அது கலையாது நடந்து வருகிறது.

இதைக் கவனியுங்கள்!

பட்டப் படிப்புப் படித்து விட்டால், அதோடு ஒரு வறட்டு ஜம்பம் இளைஞர்களைப் பற்றிக்கொள்கிறது. உத்யோகமென்றால் மேஜையும் நாற்காலியுமுள்ளதாக இருக்க வேண்டுமென்றே தேடுகிறார்கள். உடலால் உழைக்கவேண்டிய வேலைக்கும், சிறிய சம்பளமுடைய உத்தியோகத்துக்கும் போவது அவமானமென்று பட்டதாரி இளைஞர் நினைத்துவிடுகின்றனர். இதன் பயனாக வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் அதிகமாகின்றது. ஒரு ரீதியாகப் பார்த்தால் அநேக இளைஞர்களின் மனோபாவத்தையும் இந்த ஸர்வ கலாசாலைப் படிப்புக் கெடுத்து விடுகிறது. அது ஒரு தேசத்துக்குப் நஷ்டமல்லவா?

இதையெல்லாம் உத்தேசித்து ஜர்மன் அரசாங்கம் செய்துள்ள ஒரு யோசனையை உலகத்திலுள்ள அரசாங்கங்களும் சர்வ கலாசாலைகளும் கவனிக்க வேண்டும். ஜர்மன் சர்வ கலாசாலைகளைச் சேர்ந்த காலேஜ்களில் சென்ற ஆண்டில் 24700 மாணவர்கள் பயின்று வந்தனர். அரசாங்க மந்திரி அங்கு ஓர் உத்தரவு போட்டிருக்கிறார். இனி காலேஜ்களில் 15 ஆயிரம் மாணவர்கள்தான் பயிற்சி பெறலாமாம். அதிலும் 1500 பெண்கள்தான் இருக்கலாமாம். ஆங்காங்கு யார்யார் காலேஜ்களில் சேர அருகதையுள்ளவர்களென்பதை நிர்ணயிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமாம். அதைத் தவிர மெட்ரிகுலேஷன் பாஸ் செய்த 23 ஆயிரம் மாணவர்களை மேல் படிப்புக்குப் போகக் கூடாதென்றே தடுத்து விட்டார்களாம்.

பெரிய பெரிய பட்டப் பரீக்ஷைகளையெல்லாம் கொடுத்துவிட்டு உப்புக்கும் பயனின்றித் தெருவில் அலையும் கூட்டத்தை ஏராளமாக இந்தியாவில் பார்க்கின்றோம். இந்த மாணவர்களுக்கு ஆங்காங்கு கட்டாயம் ஏதேனும் உத்தியோகங்கள் கொடுக்க, சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறது. அது செய்ய முடியாத போனால் வாஸ்தவமாகத் திறமை சாலிகளாகவும் தேசத்துக்குப் பயன் தரக்கூடியவர்களாகவும் உள்ளவர்களையே காலேஜ் படிப்புக்குத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்திய சர்க்கார் ஜர்மனியிலிருந்து இதைக் கற்றுக்கொள்ளக் கூடாதா?



காலட்சேப சம்பிரதாயம்

(காயனபடு ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய்.)

ஹரிகதா காலட்சேபம் செய்பவர் “ஆதௌ கீர்த்தனாரம்பத்தில்” என்று ஆரம்பிக்கிறார்க ளல்லவா? இவ்வழக்கம் இங்குள்ளவர்களுக்கு வெகு காலத்திற்குமுன் ஏற்பட்டதல்ல; சமீபத்தில் உண்டானதுதான். இந்த வரலாற்றைக் கீழே காணலாம்.

குவாலியர் சமஸ்தானத்தில் ராமச்சந்திர பாவா என்ற ஓர் பாகவதோத்தமர் இருந்தார். அவர் 75-வருஷங்களுக்கு முன் ராமேசுவர யாத்திரையாக இந்தப் பக்கம் வந்தார். அப்பொழுது தஞ்சாவூருக்கு விஜயம் செய்திருந்தார். தஞ்சாவூரில் சில ஹரிகதைகளும் செய்தார். இவற்றைக் கேட்ட பாய் சாஹிபு அவர்கள், அவரைத் தஞ்சையிலேயே தங்குமாறு கேட்டுக்கொள்ள, அவரும் அதற்கு இணங்கித் தங்கிவிட்டார்.

பிற்காலத்தில் பெயரும் புகழும் படைத்துத் தென்னிந்தியாவுக்கே பாகவதசிகாமணியாக விளங்கிய கிருஷ்ண பாவதரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்க ளல்லவா? இந்தக் கிருஷ்ண பாவதருக்கு அப்பொழுது பாலிய வயது; பிடில் வாசிக்கத் தெரியும். ராமச்சந்திர பாவாவின் ஹரிகதா காலட்சேபங்களில் இவர் பிடில் வாசித்து வந்ததுடன், கதா சிரவணத்திலும் பேரார்வம் மிகுந்தவரானார். பாவா கூப்பிட வேண்டுமென்றில்லாமல், இவர் தாமாகவே அவர் கதைகளுக்குச் சென்று, பிடில் வாத்தியத்தைக் கையேந்தி வாசித்து வந்தார். இதனால், கிருஷ்ண பாகவதருக்கு அப்பெரியாரின் கதைகளில் இயற்கையாக ஒரு ஆர்வம் பெருகியது.

பாவாவின் சங்கீத, சாஹித்ய, விஷய சாரங்களை, இந்த இளைஞர் கொஞ்சம் கொஞ்சமாகக் கிரகித்து வந்தார். காலக்கிரமத்தில் இவருக்கும் ஹரிகதை செய்ய வேண்டும் என்ற விருப்பம் உதித்தது. ஆனால், அக்காலத்தில் இங்கே நடந்து வந்த கதா காலட்சேபங்களின் தோரணையில் இவ்விளைஞருக்கு வெறுப்பு. அந்த முறையைக் களைந்து, ராமச்சந்திர பாவாவைப் போல் நூதன வழியில் கதை செய்ய ஆரம்பித்தார் கிருஷ்ண பாகவதர். நூதன முறையில் சங்கீத சாஹித்தியங்களை இணைத்துக் கொண்டார்; உத்தர தட்சிணப் பிராந்தியங்களின் சங்கீத சாரத்தையும், வசன விசேஷத்தையும் கலந்தார்; ஹாவ பாவங்களோடு கூடிய அபிநய நர்த்தனங்களையும் சேர்த்துக் கொண்டார். இந்த மாதிரி புதிய முறையில் அவர் கதை செய்யவே, காலம் ஆக ஆக, அவர் கதைகளுக்கு நல்ல பெயரும் புகழும் ஏற்படலாயின.

இவ்வாறு கிருஷ்ண பாகவதர் கையாண்டு வந்த சம்பிரதாயந்தான், இப்பால் வந்த பாகவதர்களால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. பாகவதர்கள் இப்படித்தான் சொல்லுகிறார்கள்; ஜனங்களும் இதை நம்புகிறார்கள். ஆனால், என்னுடைய ஆச்சாரியர் ஒரு அபிப்பிராயத்தை என்னிடம் அடிக்கடி தெரிவிப்பதுண்டு. “கிருஷ்ண பாகவதருடைய சாம்பிரதாயம் அவரிடம் உதித்து, அவருடனேயே மறைந்துவிட்டது” என்றே என் ஆச்சாரியர் சொல்லுவார். ஏனெனில், கிருஷ்ண பாகவதருடைய கதா சாம்பிரதாயத்தையும் அவர் ஆங்காங்கு காட்டிவந்த வாக்சாதுர்யத்தையும் வர்ணிக்க வர்ணிக்கப் பெருகும்.

பஞ்சபதி ஆரம்பம் முதல் நாம சித்தாந்தம் வரையில், கிருஷ்ண பாகவதர், ராமச்சந்திர பாவாவையே பின் பற்றினார். இதனால், ஒரே கீர்த்தனங்களைப் பாடி வந்தார்; சமுஸ்கிருத வசனங்களை அப்படியே மொழி பெயர்த்துச் சொல்லிவந்தார். ஆகையால், பாவா “ஆதௌ கீர்த்தனப் பிராரம்பாசீடாயி” என்று உரைத்து வந்ததை “ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே” என்று இவரும் அர்த்த ஞானத்தோடு சொல்லிக் கொண்டு வந்தார். இந்தப் பதம்தான் இக்காலத்தில் அர்த்தமில்லாமல் வழங்கி வருகிறது. கதாரம்பத்தில் சொல்லும் பதமே இப்படி இருப்பதால், கதை பூராவுமே அர்த்தமில்லாமலே நடக்குமோ என்ற சந்தேகம் ஜனிப்பது எவருக்கும் சகஜம். எனக்கும் இந்தச் சந்தேகம் ஏற்பட்டதுண்டு. இப்படி ஹரிகதையின் சம்பிரதாயத்தைச் சொல்லுவதில் ஒன்றும் கஷ்டமில்லை; ஆனால் உள்ளபடி ஹரிகதை செய்வது அவ்வளவு சாமான்யமானதல்ல.

உண்மையில் ஹரிகதையைச் சரியானபடி செய்வதானால், எவ்வாறு செய்யவேண்டும் தெரியுமா? வேத சாஸ்திரங்கள் இருக்கின்றன; இதிகாசபுராணாதிகள் இருக்கின்றன. இவற்றைப் படிப்பதால் அறியக் கூடாத விஷயத்தையும்கூட, வெகு சுலபமாக எடுத்துச் சொல்ல வேண்டும். ரஸானுகுணமாகப் பாடியும், ரஸபரிதபாகப் பேசியும் அரிய விஷயங்களைச் சொன்னால், பாகவதர் எல்லார் மனதையும் கவர்ந்துவிட முடியும்.

தென்னாட்டுப் பிராசீன பாகவதர்களைச் சாமான்ய ஜனங்கள் என் மதிக்கவில்லை? அவர்கள் சம்ஸ்கிருத வித்வான்களாயிருந்தார்கள்; பக்திமேலீட்டால் தாம் இஷ்டப்படி கதை செய்து வந்தார்கள். ஜனங்கள் ரஸிக்கவில்லை. அப்படிக்கின்றி, பற்பல ரஸங்களையும் காட்டி, கேட்போரை உற்சாகப்படுத்தி, சங்கீத இனிமை, வசன ரஸம், ஹாவ பாவ விசேஷம் இவற்றால் தம் வசப்படுத்தி, ஈசுவர பக்தி உண்டாகும்படி செய்வதே பாகவதர்களுடைய தர்மமாகும்.

உலகப் பிரசித்திப் பெற்ற

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,

பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம்,

முதலிய வாடை கமழுகின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால்
அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார்
அண்டு ஸன்,
புகையிலைக் கமிஷன் ஏஜண்டுகள், அண்டு
மூக்குத்தூள் வியாபாரிகள்.
39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,
தபால் பெட்டி நெ. 189. சென்னை.
தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.

கதரை அணியுங்கள்

சந்திரன்

மீனினமோடிப் பறக்குதம்மா—ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா—இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா.

முல்லைமலர்ப் பந்த லிட்டனரோ—தேவர்
முத்துவிதானம் அமைத்தனரோ
வெல்லுமதியின் திருமணமோ—அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ

அம்புயம்வாடித் தளர்ந்ததம்மா—அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பிதம்மா—மதிக்
கின்னுரினி யாருமுண்டோ அம்மா.

மாற்றம் உலகின் இயற்கையென—இங்கு
மாந்தரும் கண்டு தெளிந்திடவோ
போற்றுமிறைவனிம் மாமதியம்—விண்ணில்
பூத்து நிலவ விதித்தனனே

அம்புலிக்கூட்டில் முயல்வருமோ—ஈதோர்
அண்டப்புளுகோ அறியேனம்மா
பம்பியெழுமலை அங்குளதும்—மேலைப்
பண்டிதர் கண்டகனவோ அம்மா.

கூனக்கிழவி நிலவினிலே—ராட்டில்
கொட்டை நூற்கும்பணி செய்வதையும்
மாநிலங் கண்டு மகிழ்ந்திடவே—காந்தி
மாமதியோங்கி வளருதம்மா.

சின்னஞ்சிறுவில்லாய்க் காணுதம்மா—பின்னர்
செம்பொற்குடம் போலேதோன்றுதம்மா
என்ன அதிசயம்! பாராயம்மா—ஈதோர்
இந்திர ஜாலமோ கூறுயம்மா.

வளர்ந்து வளர்ந்து வருகுதம்மா—உடல்
வட்டந்திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்து பின்போகுதம்மா-கண்ணில்
சற்றுந் தெரியாமலாகுதம்மா.

பாலாழிமீது படர்ந்த வெண்ணெய்—ஒரு
பந்தாயுருண்டு திரண்டதுவோ
மேலாயுலகில் ஒளிசெயவே—ஈசன்
விண்ணகமிட்ட விளக்கிதுவோ.

இரவைப் புகலாயியற்றுதம்மா—வெப்பம்
இல்லாதிளைப் பெலாம் ஓட்டுதம்மா
அரவம் விழுங்கினும் அஞ்சாதம்மா—எங்கள்
ஆண்டவன் சூடுமணியே யம்மா.

பொன்மரம் காய்த்த கனியிதுவோ—இந்தப்
பூமகள் ஆடும் கழங்கிதுவோ
கன்மனமுங் களிகொள்ளக் கவினொளி
காட்டிவிளங்கும் மதியிதுவோ

கண்ணுதலுள்ளக் கருணையதோ—கொற்கைக்
காவலர் கண்ட புகழதுவோ
மண்ணகஞ் செய்திடு புண்ணியமோ—இன்று
வானகம் வந்து நிலவுதம்மா.

—தேசிக விநாயகம் பிள்ளை.

ஒரு சிறு வீரப்பொறி

(செல்லம்)

தமிழ் மன்னர் இருவர்களுக்குள் பெரும்போர். நால்வகைச் சேனையும் முனைந்து போர் செய்கின்றன. பளபள வென மின்னும் வாளும் வேலும், கண்களையும் உயிர்களையும் ஒரு சேரப் பறிக்கின்றன. இரத்த ஆறு ஓடுகிறது. பிணமலைகள் பல இடங்களிலும் உயர்கின்றன. வீரர்கள் அறைகூவும் ஒலியும், வஞ்சினம் கூறும் ஒலியும் கேட்போர் மனத்தில் திகிலை உண்டுபண்ணுகின்றன. நம் தமிழ் வீரர்களின் காலில் கட்டிய கழல்களின் ஒலி இந்த அமர்க்களத்தின் இடையே இனிமையான ஓர் ஓசையைத் தருகின்றது. இதுதானே உலகம். சூழ்ந்த இருள்; துளி ஒளி; உயிர்போகும் துன்பம்; ஒரு சொட்டு இன்பம்.

தன் இறைவனருகே வீரர்கள் சூழ்ந்துவிட்டதை அறிந்தான் ஒரு வீரன். கை வேலை உயரப்பிடித்து நொடியில் வந்து சேர்ந்தான். வீராவேசத்தோடு, எதிர் நின்ற யானையை எறிந்தான். விழுந்தது யானை. யானையை அன்றி வேறெதையும் தனக்குச் சமமாகக் கருதாத வீரன் அவன். பின்னும் பல கரிகள் அவனைச் சூழ்ந்து நெருக்குகின்றன. வீராவேச மயக்கத்தில் தன்வேல் எறிபட்டதையும் அறியாமல் தேடுகின்றான். தன் மார்பில் ஓர் வேல்பட்டு ஊடுருவி நிற்பது அவனுக்கு நினைவே இல்லை. சற்று நேரத்தில் தன் மார்பிற் பட்ட வேலைக் கண்டான். மிகுந்த களி கொண்டான். காலில் தைத்த முள்ளைப் பிடுங்குவதுபோல வெடுக்கென்று பிடுங்கினான். மற்றொரு யானையின்மீது வீசி அதன் உயிரையும் கொண்டான். நின்று சிரிக்கின்றான். இதுதான் தமிழர் வீரம். தமிழ் இலக்கணமான புறப்பொருளில் எரியும் பெரு நெருப்பில் ஒரு பொறி.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். —(குறள்.)

நோய் !

இருவரும் ஆஸ்பத்திரியில் அடுத்தடுத்த கட்டில்களில் படுக்க வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் ராமன் மாத்திரம் அடிக்கடி எழுந்து அவனுக்கருகேயிருந்த ஜன்னலண்டை நின்று கொண்டு பார்ப்பான். "தெருவிலே, இப்பொழுது ஒரு கூடைக்காரி செல்கிறாள். என்ன நடை! அதோ அந்த பங்களாவில் அழகான குழந்தைகள் மலர்கள் பறித்து விளையாடுகின்றன. எவ்வளவு அழகாயிருக்கிறது!" என்றெல்லாம் மற்றவனுக்குச் சொல்லிக் கொண்டேயிருப்பான்.

இவ்வார்த்தைகளெல்லாம் மற்றவன் காதில் சுய அர்த்தத்துடன் விழவில்லை. தானநுபவிக்காத இன்பத்தை ராமன் அநுபவிப்பதில் அவனுக்குக் கொஞ்சம் அசூயை பிறக்கலாயிற்று.

"சே! இவ்வளவு கீழ்த்தரமாக நாம் எண்ணலாமா?' என்று உடனே தன்னைத் தானே கடிந்து கொள்வானவன்.

ஒரு நாள் ராமன் சொன்னான்: "அப்பா, மழைக்காலம் ஒய்ந்து விட்டதல்லவோ? சூரியனின் இளங்கதிர்கள் உதித்து, பனியையெல்லாம் சட்டென்று போக்கவே, மரங்கள் திடீரெனப் பச்சையாகத் தோன்றுவது எவ்வளவு அழகாயிருக்கிறது தெரியுமா?"

மற்றவன் ஏதேதோ யோசனை செய்து கொண்டிருக்கையில் இது சொல்லப் பட்டதால், அவனது எண்ணங்கள் தடைப்பட்டன. இவ்வாறு ராமன் வேணுமென்றே ஏதேதோ சொல்வதுபோல் அவனுக்குத் தோன்றிற்று.

ஆமாம்; தான் ஜன்னலுக்கு அருகாமையில் இருப்பதன் குணாதிசயங்களை வேணுமென்றே ராமன் வர்ணிப்பது போலவேயிருந்தது—மற்றவனுக்குப் பொறாமை மூட்ட வேண்டுமென்றே அவன் சொல்வதுபோலிருந்தது. ஒவ்வொரு தடவையும் அவன் வற்புறுத்தி எதையெதையோ வர்ணித்தது இச் சந்தேகத்தைப் பலப்படுத்தியது.

இதை மற்றவனா லடக்க முடியவில்லை. அடக்கிப் பார்த்ததுதான் மிச்சம். ராமனின் மேல் பொறாமை, ஏற்பட்டு வரவர அது வளர்ந்து கொண்டிருந்தது.

இரவு; ராமன் திடீரென்று எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டு இரும ஆரம்பித்தான். கொடிய வியாதியாதலால் மூச்சுக்காகத் திண்டாடினான். மற்றவனும் விழித்துக் கொண்டான். ராமனின் உபாதையைப் பார்த்ததும் அருகாமையிலிருந்த மின்சார மணியை அடித்தான்.

நர்ஸ் டாக்டருடன் வந்தாள். ராமனைத் தற்காலிகமாகச் சுவஸ்தப் படுத்திப் படுக்கச் செய்தார்கள்.

இம்மாதிரி யடிக்கடி நடந்தன. ராமனுடைய 'கேஸ்' கொஞ்சம் கடுமையானதல்லவா? ஒவ்வொரு சமயம் பெரிய ஸர்ஜன்கூட வர நேரிடும். மற்றவன் அடிக்கடி மணியடித்துச் செய்த உபகாரத்தினால் ராமனுடைய சிரமம் அவ்வப்போது தீர்ந்து வந்தது.

கொஞ்ச நாள் கழிந்த பின்பு விதைக்கப்பட்ட 'பொறாமை வித்து' வளர்ந்து பெரிதாயிற்று. ஒவ்வொரு சம்பாஷணையின் சிறு அம்சத்திலும் மற்றவன் தன் மனதுக்குள்ளேயே குற்றம் கண்டு பிடித்துக் கொள்ள ஆரம்பித்தான்.

இந்தப் பொறாமை அவன் மனதைப் புண்படுத்தியது. தான் எப்படியாவது அந்த ஜன்னலண்டையுள்ள கட்டிலையடைவது என்று நிச்சயித்து விட்டான். அதற்கான வழி என்ன?

எண்ணங்களும் ஒரு முடிவை யடைந்தன. ராமனுக்கு இரவில் இருமல் வரும்பொழுது இனி நர்ஸை யழைக்காமலே இருந்துவிட்டால் அவன் அப்படியே மடிந்து விட்டாலும் விடலாமல்லவா? பிறகு தனதெண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாமல்லவா? இப்படி ஓர் யுக்தி மற்றவனுக்குத் தோன்றிற்று.

இந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சிக்கலாயினான். பல இரவுகள் ராமனுக்குப் பெருமூச்சு ஏற்படாதிருப்பது கண்டு மற்றவன் கடவுளைக்கூட நிந்தனை செய்தான்.

ஓரிரவு ராமனுக்கு இருமல் வந்தது. மற்றவன் கை தன்னையறியாமலேயே மின்சார மணியண்டை சென்றது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு கையைக் கட்டுப்படுத்தி யிழுத்துக் கொண்டான். ராமனுக்கு இருமல் அதிகரித்துக் கொஞ்ச நேரம் கழித்தவுடன் அப்படியே படுக்கையில் சாய்ந்து விட்டான். பாவம்!

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றவன் அவன் தலையிலிருந்த ஏதோ ஒரு பெரிய பாரம் அகன்றது போல் எண்ணிக் கண்ணயர்ந்தான்.

மறுநாட் காலை டாக்டர்கள் ராமனின் சவத்தைப் பார்க்க வந்தார்கள்.

பெரிய டாக்டர் அடுத்த படுக்கையிலிருந்த மற்றவனைப் பார்த்து,

"முன்போல் நீங்கள் மணியை யடித்திருந்தால் இதைத் தடுத்திருக்கலாமே?" என்றார்.

அவன் கேலிச் சிரிப்புடன் "ஆம், தடுத்திருக்கலாம்" என்றான்.

ராமன் சவம் அகற்றப்பட்ட பின்பு டாக்டரிடம் மற்றவன்,

"இனி நான் ராமன் படுத்திருந்த கட்டிலில் படுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டான்.

டாக்டரும் சரி யென்றார்.

மறுதினம் காலை மெள்ள எழுந்திருந்து ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். ஈ, காக்கா கூட அவன் கண்ணுக்குத் தென்படவில்லை; ஆஸ்பத்திரியின் பின்கட்டுத்தான் அவனுக்குத் தென்பட்டது.

["London Mercury"—யில் தோன்றிய கதையைத் தழுவி எழுதப்பட்டது.]

Rambles in Vedanta

BY

RAJAM IYER

Price Rs. 5 *Postage extra.*

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

தங்கக் களஞ்சியம்

[பெரியார்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் மறையாதவாறு காப்பாற்றுவதுதான் நாம் செய்யக்கூடியது. எவ்வளவோ பெரியோர்களின் சிறு சம்பவங்கள் கர்ண பரம்பரையாகவே இந்த நாட்டில் இருந்து வருகின்றன. அவைகளைத் திரட்டிக் காப்பாற்றுவது இலக்கிய உலகின் கடமையாகும். ஆகவே, அன்பர்களே! தமிழ் நாட்டின் பெரியார்களைப் பற்றிய ரஸமான சிறு குறிப்புகள் எதையேனும் அறிவீர்களானால் அதை எழுதி அனுப்புங்கள்; தங்கக் களஞ்சியத்தை நிரப்புங்கள்.

—சங்கு ஸுப்ரஹ்மணியன்.]

மிஸ்டர் 'டாம்டாம்'

பாரதியாருக்கு மிஸ்டர் 'டாம்டாம்' என்று ஒரு பெயர் வெகு நாளைக்குப் புதுச்சேரி கோஷ்டியில் வழங்கிவந்தது. காரணம் அவர் ஒரு சமாசாரத்தை வெகு சீக்கிரமாகப் பரவச் செய்ததேயாகும். ஸ்ரீயுத அரவிந்த கோஷைப் பலவந்தமாகப் புதுச்சேரியிலிருந்து யாரோ கொண்டுபோய் விடப் போவதாக, அந்தக் கோஷ்டிக்கு ஓர் செய்தி வந்தது. அதைக் கேட்டது தான் தாமதம். பாரதியார் தமக்குத் தெரிந்த ஒவ்வொரு வீட்டிற்கும்போய் இந்த இரகஸ்யத்தை அறிவித்துவிட்டாராம். விஷயம் இரகஸ்யம்தான். ஆனால் நூற்றுக்கணக்கான பேருக்கு ஒரே நாளில் தெரிந்துவிட்டது. அரவிந்தர் பாரதியாரை 'டாம்டாம்' அதாவது 'முரசு' என்று பெயர் வைத்து அழைத்தாராம்.

போட்டிப் பரிசு

தமிழ்நாட்டைப் பற்றிப் புகழ்ச்சியாக ஓர் கவிதை இயற்றுபவருக்குப் பரிசு தருவதாக, சென்னையில் ஒரு சங்கத்தார் விளம்பரம் செய்திருந்தார்கள். புதுச்சேரியிலுள்ள அன்பர்கள் பாரதியாரைச் சூழ்ந்துகொண்டு அப்போட்டிப் பரிசுக்கு ஒரு பாட்டு எழுதியனுப்புமாறு கேட்டுக்கொண்டார்கள். பாரதியார் இத்தகைய போட்டிப் பரிசுகளுக்கு எழுதுவதற்குத் தமக்கு இஷ்டமில்லையெனப் பிடிவாதமாக மறுத்துவிட்டார். பிறகு 'நச்சரிப்பு' அதிகமாய்ப் போகவே, திடீரென்று "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்ற பாடலைத் தொடங்கினார். பாட்டுக்கட்டி முடிந்ததும் அன்பர்களுக்கு அது அமுதமாக இருந்தது. ஒருவர் அதை நகலெடுத்துப் போட்டிப் பரிசு நடத்திய சங்கத்திற்கு அனுப்பினார். சில நாள் கழித்துப் பரிசின் முடிவு வெளி வந்தது. பாரதியார் முதலில் சொன்னது வாஸ்தவமாயிற்று. அதாவது 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற தெய்வீகக் கவிதைக்குப் பரிசு கிடைக்கவில்லை. வேறு யாருக்கோ பரிசு கொடுக்கப்பட்டதாம். அந்தப் பரிசு பெற்ற கனவானுடைய பாட்டு இப்போது எங்கிருக்கிறதோ வெளிச்சம் போட்டுப் பார்க்கவேண்டும். ஆனால் பாரதியாரின் 'செந்தமிழ்நாடு' சாகாவரம் பெற்றுத் தமிழரிடை உலவுகின்றது.

கற்பனையா? வாஸ்தவமா?

ஸ்ரீயுத அ. மாதவையா எழுதிய பத்மாவதி சரித்திரம் தமிழ் நாவல்களுள் தலைசிறந்தது என்பதை அறிவோம். அந்நூலை ஏதோ 'சரித்திரம்' எழுதுவதுபோல அவ்வளவு இயற்கையோடு மாதவையா எழுதி முடித்தார். கடைசிப் பக்கத்தில் "இந்தக் கதா நாயகனுடைய விலாசத்தை வாசகர் அறிந்து கொள்ளவேண்டுமா?" என்று வெகு சாதுர்யமாக நாவலை முடித்திருந்தார். அதை வாஸ்தவமான வாக்யமென்று நினைத்து அநேகர் மிக்க ஆவலோடு ஸ்ரீயுத மாதவையாவுக்குக் கடிதம் எழுதினார்களாம். அவர்களுள் கொடையாளிகளுள் சிறந்த ஆண்டிப்பட்டி ஜமீன்தாரான ஸ்ரீ பெத்தாச்சி செட்டியாரும் ஒருவரென்றால், மாதவையாவுடைய எழுதுகோலின் பெருமையையே குறிக்கு மன்றோ?

பெரியார் போர்ட்டரானார்

வடநாட்டில் வசித்த ஈசுவர சந்திர வித்தியாசாகரர் என்ற பெரியாரைப் பற்றி அநேக கதைகளுண்டு. ஒரு தடவை ஒரு கூட்டத்திற்குத் தலைமை வகிக்குமாறு, அவரை ஒரு நகரத்தார் அழைத்திருந்தார்களாம். எளிய வாழ்வில் மோகம் கொண்ட வித்தியாசாகரர் சாதாரண ஆடையுடுத்து மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்து குறிப்பிட்ட ஸ்டேஷனில் போய் இறங்கினார். அதே வண்டியில் ஒரு டம்பாச்சாரிப் பேர்வழியும் வந்து இறங்கினார். அந்த டம்பாச்சாரி 'போர்ட்டர், போர்ட்டர்' என்று கத்தியும் ஒரு கூலியாள் கூடக் கிடைக்கவில்லை. ஆகவே அவர் அருகே ஸர்வ ஸாதாரணமாக நின்றிருந்த வித்யாசாகரரைப் பார்த்து "என் அப்பா இந்த மூட்டையைத் தூக்கிக் கொண்டு வருகிறாயா?" என்று கேட்டாராம். கொஞ்சம்கூடப் பின் வாங்காமல் ஈசுவரர் இசைந்தார். பெரியார் போர்ட்டாரானார். அன்று மாலை அந்த டம்பாச்சாரியார் தடபுடலாக ஆடைகளையணிந்து குறிப்பிட்ட பொதுக் கூட்டத்துக்குப் போய் அமர்ந்தபோது, காலையில் தமக்கு மூட்டை தூக்கிய போர்ட்டர் அக்கிராஸனராக வீற்றிருப்பதையும் அவரே மகானான ஈசுவரசந்திர வித்தியாசாகரரெனவும் தெரிய வந்து நடுநடுங்கிப் போனாராம். மன்னிப்பும் கேட்டுக்கொண்டாராம். இதே மாதிரி மாயவரத்தில் ஒரு தடவை ஏதோ மூன்றும் வகுப்பு வண்டியினின்று இறங்கிய யாரோ ஒரு சாதாரண மனிதர், மகாத்மா காந்தியென்று பின்னரே தெரியவந்ததாம். இந்தக் கதையையும் தமிழர் அறிந்து கொள்ளவேண்டும்.

குலைக்கிற நாய் கடிக்குமா?

சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் பிரசித்திப் பெற்ற பாஷ்யம் அய்யங்கார், தமது நண்பரான ஒரு ஆங்கிலக் கனவானுக்கு ஒழிந்த வேளையில் சமுஸ்கிருதம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அந்த ஆங்கிலேயரின் பங்களாவின் வாசற்படிக்குப் போனதும் அங்கு வீற்றிருந்த நாய் 'லொள் லொள்' என்று பாய்ந்து பாய்ந்து குலைக்க ஆரம்பித்தது. இயற்கையாகவே பாஷ்யம் அய்யங்கார் புறமுதுகிட்டு ஓட நேர்ந்தது. உள்ளிருந்து சிரித்துக்கொண்டே ஆங்கிலேயர் வந்தார். "என்ன பாஷ்யம் அய்யங்காரவர்களே! குலைக்கிற நாய் கடிக்காதென்ற பழமொழியை மறந்து விட்டீர்களோ?" என்று சாமர்த்தியமாகப் பேச்சைத் தொடங்கினார். உடனே பாஷ்யம் அய்யங்கார், "அந்தப் பழமொழியைத் தாங்கள் அறிவீர்கள். நானும் அறிவேன். ஆனால் குலைக்கிற நாய்க்கு அது தெரியுமா?" என்று பதில் கூறினார். பாஷ்யம் அய்யங்காரின் சமயோசித வாக்குச் சாதுர்யம் அப்போது விளங்கிற்று.

நாயின் நாக்கு நுரை

ராஜா ரவிவர்மா ஒரு தடவை நாயின் படமொன்றை எழுதிக் கொண்டிருந்தார். நாய் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு படுத்திருப்பது போலவும், அதன் வாயில் நுரை ஏற்படுவது போலவும் எழுதப்பட வேண்டியது அந்தச் சித்திரம். எழுதி எழுதிப் பார்த்தாலும் நுரை மட்டும் ஒழுங்காக இயற்கையாக அமையவில்லை. ரவிவர்மா அலுத்துப்போய்ப் படத்தைத் தரையில் எறிந்துவிட்டு அதன்மீது மேஜையிலிருந்த ஸ்பான்ஜையும் (துடைப்பதற்கான கடற் பஞ்சு) வீசி அடித்தார். அந்தக் கடற் பஞ்சு படத்திலிருந்த நாயின் வாயருகே விழுந்தது. மனது சாந்தமடைந்த பிறகு ரவிவர்மா மறுபடியும் அப்படத்தை எடுத்தார். என்ன ஆச்சர்யம்! அந்த ஸ்பான்ஜு விழுந்த இடம் அப்படியே நாய் நுரை கக்குவது போலவே காணப்பட்டதாம். அனுயாசமாகச் செய்த ஆத்திரக் காரியம் உபயோகமாக ஆகிவிட்டது ரவிவர்மாவுக்கு.

கிருஷ்ணய்யருக்கு மூன்று பிடில்கள்

ஒரு சமயம் பூச்சி அய்யங்காருக்குப் பக்க வாத்தியமாகப் பிடில் வாத்தியத்தில் பிரசித்திப் பெற்ற திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். கச்சேரிக்குப் பேசியவர்களிட மிருந்து இரண்டாம் வகுப்புப் பிரயாணச் செலவு வாங்குவது அவர் வழக்கமாயினும் மூன்றும் வகுப்பு டிக்கட்டுதான் அவர் வாங்குவது சம்பிரதாயம். இந்தத் தடவையும் மூன்றும் வகுப்பில் தான் வந்தாலும், இரண்டாம் வகுப்பில் வந்து கொண்டிருந்த பூச்சி அய்யங்காரிடம் தமது பிடில் பெட்டியை வைத்திருந்தார். வண்டி எழும்பூரில் வந்து நின்றது. பூச்சி அய்யங்கார் பெட்டியை எடுத்துக் கொண்டு வருவாரென்று நினைத்து, கிருஷ்ணய்யர் தமது வீட்டுக்குப் போய்விட்டார். அய்யங்காரோ, மறந்து போய்ப் பெட்டியை வண்டியிலேயே விட்டுவிட்டார். அன்று மாலை இதைக் கேட்டு கிருஷ்ணய்யர் தவியாய்த் தவித்துவிட்டார். என்ன செய்வது? இன்னும் இரண்டு நாளில் கச்சேரி. ஆகவே, ஓர் கம்பெனியில் போய் ஒரு புதுப் பிடில் வாங்குவதென்று போனார்கள். ஆங்கிலம் நன்கு அறிந்த பூச்சி அய்யங்கார் அங்கு வந்திருந்த பிரசித்திப்பெற்ற மேனாட்டு வாத்தியக்காரரொருவருக்கு கிருஷ்ணய்யரைப் பரிச்சயம் செய்து வைத்தார். அங்கிருந்த விலையுயர்ந்த ஒரு வாத்தியத்தை எடுத்துக்கொண்டு சிறிது நேரம் தமது சாமர்த்தியத்தைக் காட்டினார் கிருஷ்ணய்யர். அந்த மேனாட்டு வித்வான் சந்தோஷமடைந்து அதே விலையுயர்ந்த பிடிலை பரிசாகத் தந்துவிட்டதாகச் சொன்னாராம். பிறகு கம்பெனியைச் சுற்றிப் பார்க்கும்போது ஒரு உடைந்து போன பிடில் கிடந்ததைக் கண்டு, அதையும் வாங்கிக்கொண்டு கிருஷ்ணய்யர் வந்து சேர்ந்தாராம். மறு நாளே அந்த உடைந்த பிடிலை ஒட்டிக் காய வைத்ததோடு, அடுத்த நாள் கச்சேரிக்கும் அதையே எடுத்து வைத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தாராம். பூச்சி அய்யங்கார் "ஸ்வாமி! ஏன் இந்தப் பழசு! புதிசு கிடைத்ததே, அதை எடுத்துக் கொள்ளலாமே" என்று சொல்லிப் பார்த்தும் அய்யர் கேட்கவில்லை. அன்று அந்தப் பழையப் பிடிலிலிருந்து அபூர்வமான சங்கீதம் வருவிக்கப்பட்டதாம். ஆனால் அதே கச்சேரி நடந்துகொண்டிருந்த போது, எழும்பூர் ஸ்டேஷன் மாஸ்டர், ரயிலில் கேட்பாரற்றுக் கிடந்த பிடில் பெட்டியையும் யாருடையதென்று ஊகித்து, கச்சேரி நடந்த விடத்துக்கு அனுப்பிவிட்டாராம். இப்படியாக அன்று கச்சேரியில் மூன்று பிடில் பெட்டிகள் கிருஷ்ணய்யரிடம் இருந்தன.

விற்பனைக்காகச் செய்யும் விபரீத கற்பனையை சடுதியில்
கண்டுபிடிக்கும் சதுரர்கள்

சந்தோஷமாய் வாங்குவது எது?

நாட்கள் செல்லச் செல்ல நறுமணம், காரம் முதலியவை
மெல்ல மெல்ல ஓங்குவதும் நானிலமே நாடோறும் நாடுவதும்

எங்கள்

தென் இந்தியா

பொடிக்களஞ்சியப் பொடியே

விலாசம்:—தென் இந்தியா பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜியார்ஜ் டவுன், மதராஸ்.
மானேஜர், உலகப் பிரசித்திப்பெற்ற
ஷண்முக முதலியார் பௌத்திரர் ஆர். கே. ஜெயராம் முதலியார்

இந்தியாவில்
மிகச் சிறந்தது

7
அளவுகள்
1, 2, 4, 6, 8, 12, 16
பேர்களுக்கு
ரூ. 10, 14, 18, 23, 29, 35, 41.
சிலோனில் முக்யமான ஊர்களுக்கு ஏஜண்டு தேவை.
!

சகல விதமான சமையலுக்கும் சர்வ சம்மதமாய், செலவுச் சுருக்கம் சிக்கனம், செம்மை உணவு ருசி, முதலிய எல்லா சௌகரியங்களும் பொருந்திய தெனச் சிறந்து விளங்கும்
ருக்மணி குக்கர்
சமையலடுக்கு உங்களுடைய வீட்டிலிருக்க வேண்டாமா?
விபர புத்தகம் இனம்.
ருக்மணி குக்கர் கம்பெனி
இராயபுரம்.(10), சென்னை.

சென்னைச் சித்திரக் கலாசாலைக் கண்காட்சி

(சங்கு. ஸுப்ரஹ்மணியன்)

"இதே கண்காட்சி கல்கத்தாவில் நடந்தால் எத்தனை ரஸிகர் வருவார்கள் தெரியுமா?" என்று எனது வங்காளி அன்பர் கேட்டபோது, அவருக்கு என்ன பதில் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. அழகான சித்திரக் கண்காட்சி ஒன்று இதே சென்னையில் நடைபெறுகின்றது; இலவச அநுமதி. ஆனால் ஒரு நாளைக்கு, சராசரி 500 பேருக்குமேல் உள்ளே நுழைவதில்லை. தமிழரிடம் கலைச் சுவை குன்றி வருகிறதென்று பிற மாகாணத்தார் குற்றஞ் சொல்வதில் தப்பிதமென்ன? ஆனால் சித்திரம் எழுதும் வன்மைமட்டும் இன்னும் சில தமிழரிடை இருப்பதை மேற்படி கண்காட்சியிலுள் சில படங்கள் தெரிவித்துக்கொண்டிருப்பது கொஞ்சம் சந்தோஷமூட்டுகின்றது.

'கத்தரிப்புச் சித்திரம்' (paper cut) என்றால் என்ன என்பது சிலருக்குத் தெரியாதிருக்கலாம். சிறிது சிறிதாக வர்ணக் காகிதங்களைக் கத்தரித்து, துணியிலோ காகிதத்திலோ ஒட்டுவதுதான் அந்த நயமான வேலை. ஒரு அடி தூரத்திலிருந்து பார்த்தால் கூட 'பிரஷ்' வேலைபோலவே தோன்றும். சித்திரத்துக்குத் தகுந்தாற்போலவே பகைப்புலனைத் (Back ground) தேர்ந்தெடுப்பதுதான் ஓவியனின் சாமர்த்தியம். இத்தகைய கத்தரிப்புச் சித்திரங்கள் சிலவற்றை ஸ்ரீயுத தணிகாசலம் என்ற தமிழ் இளைஞர்—வயது 17 தானும்— ஷை கண்காட்சிச் சாலையில் வைத்திருக்கின்றார். 'அலை' என்று ஓர் சித்திரம். ஆவேசத்தோடு அலைகள் மோதுவதை அந்தப் படம் காட்டுகிறது. 'மலைச் சிகரம்,' 'மயில்' முதலிய இதர கத்தரிப்புச் சித்திரங்களைக் காணும்போது, இந்த 'நச்சு' வேலையில் இவ்வளவு பொறுமை காட்டியுள்ள இந்த இளைஞருக்கு வருங்காலத்தில் கீர்த்தி காத்துக்கொண்டிருக்கிறதென்றே சொல்லலாம்.

வங்காள ஓவியன் போடும் வரிகள் ஒருவகையானவை. ஜப்பானியச் சித்திரக்காரன் போடும் வரிகள் வேறு தினிஸாயிருக்கும். அதே மாதிரி தமிழ் நாட்டுக்கென்று ஓவிய வரியில் ஓர் தனிமை யுண்டென்பது நமது கட்சி. அதை மெய்ப்பிப்பது ஸ்ரீயுத துரைஸ்வாமி ஆச்சாரியார் எழுதி வைத்துள்ள 'சிவன் திருமணம்' என்ற படம். வங்காள ஓவிய ரீதியைப் பின்பற்றி அவர் எழுதி வைத்துள்ள படங்களும் கண்ணுக்கு இனிமை யூட்டுபவைதான். இதே மாதிரி ஸ்ரீயுத நடராஜன் எழுதி வைத்துள்ள 'மும்தாஜின் அந்திய காலம்', ஸ்ரீயுத நாகராஜன் கை வன்மையைக் காட்டும் 'தலைவாரிக் கொள்ளுதல்', ஸ்ரீமதி முத்துவேலம்மாளின் திறமையைக் காட்டும் 'மலை வழி' ஸ்ரீ ஸ்வாமிநாதன் வரைந்துள்ள 'தாய்' என்ற படம், இவைகள் தமிழரின் சித்திர வன்மைக்குப் பிரதிநிதிகளாகத் திகழ்கின்றன. ஸ்ரீயுத பாலகிருஷ்ணன் என்பார் 'பச்சைப் புடவை' என்று ஓர் சித்திரம் எழுதியிருக்கின்றார். அதை நேரில் பார்த்தால்தான் சுவையை முழுதும் உணரமுடியும். அந்தப் பெண்ணுக்குத்தான் என்ன அடக்கமான பார்வை! கொசவானை அவள் கையில் பிடித்திருப்பதுதான் என்ன நேர்த்தி!

கவிதையைக் 'கான்வாஸ்' துணியில் காட்டும் வன்மை வங்காளிகளுக்குக் 'காபிரைட்' போல இருந்து வருகிறது. இந்தக் கண்காட்சியிலும் அந்தப் பெருமையை வங்காள ஓவியர்களுக்கே தர வேண்டியிருக்கிறது. நமது சங்கில் சங்கீதப் பகுதியை அலங்கரித்துக் கொண்டு நடராஜ விக்கிரகத்தோடு இலகும் ஓர் சித்திரத்தை வாசகர்கள் கவனித்திருப்பீர்கள். அந்தச் சித்திரத்தையும் இன்னும் சில சித்திரங்களையும் தமது அன்போடு குழைத்து எழுதித் தந்த ஸ்ரீயுத காளி கிங்கர் கோஷ் இந்தக் கண்காட்சியிலுள்ள வெகு அழகான சித்திரங்களை யெழுதியவரென்று போற்றப்படுகிறாரென்றால் அது நமக்குப் பரம சந்தோஷத்தைத் தரும் அல்லவா?

உதாரணமாக 'அனாதைகள்' என்று ஓர் படம். கருமேகங்கள்—மின்வெட்டுக்கள்—திடீரென்று பெரு மழை—மேலே கடுமையான மலை—கீழே திடுதிடென்று ஓடும் காட்டாறு—நடுவே இரண்டு இள மான் குட்டிகள், வழி தெரியாது திணறுகின்றன. என்ன பிரதிபா சக்தி! அந்த மான் குட்டிகள் ஹ்ருதயங்களுக்குள்ளே புகுந்து புறப்பட்டாற்போல நமது அன்பர் காளி கிங்கர் எழுதியிருக்கின்றாரே! 'அந்தர லோகத்தின் தூதன்' என்று அவர் இன்னொரு படம் எழுதியிருக்கின்றார். சிவப்பான பகைப்புலன் பயங்கரத்தை அதிகரிக்கின்றது. சாவின் அழைப்பு அந்தச் சந்யாசியின் குழலினின்று புறப்படுகின்றது. இப்படிப் பயானக உணர்ச்சி ஊட்டும் சித்திரங்களைத்தான 'காளிஜி' எழுதுவார் என்று எண்ணினேன். ஆனால் அவர் எழுதியுள்ள 'சியாமளி' என்ற பெண்மணியின் முகத்தில் என்ன களை! எவ்வளவு நயம்! பார்ப்போரிடம் அவளுக்குக் கவலையையே காணோம். அந்தப் புஷ்பத்திலேயே அவள் லயித்துப்போயிருக்கிறாள். 'கிழ ஜோடி' என்ற படத்திலுள்ள இரண்டு ஆண் பெண் கழுகுகளும் பாறைமீது அமர்ந்திருப்பது தத்ரூபமாயிருக்கின்றன. அப்படங்களின் நேர்த்தியை அவரிடம் வர்ணித்தால் அவர் புகழ்மொழி ஏற்றுக்கொள்ள இணங்குகிறாரில்லை. "சௌத்ரி அவர்களின் படங்களைப் பார்த்தீர்களா? நமது நண்பர் ககன் ராய் எழுதியுள்ளவைகளைக் கண்டீரோ?" என்று பேச்சை மாற்றுகிறார். "இருக்கட்டும். பத்திரிகையில் உம்மைப் பார்த்துக் கொள்கின்றேன்" என்று சொல்லி நகர்ந்தேன்.

அவர் சொன்னதிலும் சிறிது உண்மையுண்டு. நமது நண்பர் ககன்ராய் 'பிறைச்சந்திரன்' என்ற படத்தை வைத்திருக்கிறார். 'குடிசையின் ஆத்மா' என்ற படம் நமக்குக் கவிதை யின்பம் ஊட்டுகின்றது. இங்குள்ள 224 படங்களுள் எதைப் புகழ்வது எதைப் புகழாமலிருப்பது என்ற உள்ளக் குழப்பம் ஏற்படுகின்றது.

சென்னை சித்திரக் கலாசாலையின் பிரின்ஸிபாலான ஸ்ரீயுத ராய் சௌத்ரி அவர்களின் ஓவியத் திறமையைப்பற்றி அதிகம் கூறத் தேவையில்லை. மாடர்ன் ரிவியூவிலும், 'ரூபம்' என்ற சித்திர சஞ்சிகையிலும் அவரது படங்களைக் கண்டிருப்பவர்கள் இந்தக் கண் காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் படங்களை

யும் போற்றியே தீருவார்கள். "நமாஸ்!" என்ற படம் நமது மனதை அள்ளுகின்றது. அவரால் இங்கு வைக்கப்பட்டுள்ள சிலைகள் அவருக்குச் சிற்பக் கலையிலுள்ள திறமையைக் காட்டுகின்றன.

இந்தக் கண்காட்சிச் சாலையில் எல்லோர் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டு மத்தியஸ்தானத்திலுள்ளது 'ராஸலீலா' என்ற சிற்ப வேலையாகும். கண்ணன் முகத்திலுள்ள குறுகுறுப்பும், காதலில் வயப்பட்டுள்ள கோபிகைகளின் உள்ள நிகழ்ச்சியும் இந்தச் சிற்பியின் உள்ளத்தில் எவ்வாறு தோன்றின வென்று அதிசயிக்க வேண்டி யிருக்கிறது. இதைச் செய்த ஸ்ரீயுத வெங்கடநாராயண ராவைக் கட்டாயம் நேரில் கண்டு பேசவேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு ரஸிகர் மனத்திலும் ஏற்படுமென்பது திண்ணம். இந்த வேலைப்பாட்டை, துல்யமாக வார்ப்படம் செய்து எடுக்க இந்தியாவில் ஆகுமாஆகாதாவென்றுகூடச் சந்தேகமேற்பட் டிருக்கிறது. "இத்தாலிக்கு அனுப்புவார்களோ என்னவோ" ன்று ஒரு ஓவிய நண்பர் என்னிடம் கூறினார். ஒரு காலத்தில் வார்ப்பட வேலைக்குத் தமிழ் நாடு தான் உலகத்திலேயே பெயர் பெற்றிருந்தது. ஆனால் இப்போதோ—?—. தமிழர்களே! கொஞ்சம் கொஞ்சமாவது கலையினிடம் நமக்குள்ள ருசியை வளர்த்துக் கொண்டு வருவோமானால், மீண்டும் நமது பழைய பெருமை நாட்களைக் காணுவோ மென்பதில் ஐயமில்லை.

பீஹார் பூகம்பக் கஷ்ட நிவாரணத்துக்கு உதவி

இன்று தினம் நமது ஹோட்டலில் நடக்கும் விற்பனையில் கிடைக்கும் பணம் பூராவும் பீஹார் பூகம்பக் கஷ்ட நிவாரண நிதிக்குக் கொடுத்துவிடப்படும்.

ஸி. கே. கணபதி

புரொப்ரைட்டர்

கோயமுத்தூர் கிருஷ்ணய்யர் ஹோட்டல்,

29, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.

எங்கு போவது?

[உரை நடையில் கவிதை எண்ணங்களை எழுதுவது ஆசிரியர்கள் கையாண்டு வரும் ஒரு நவீன முறை. இதற்கு உதாரணமாக சார்லஸ் பாடுலேர் என்ற பிரஞ்சு தேசத்துக் கலைஞர் எழுதியுள்ள கட்டுரையொன்றைத் தழுவி, தமிழில் ஒன்று தருகின்றோம்.]

உலகம் என்பது ஒரு பெரிய ஆஸ்பத்திரி. ஒவ்வொரு நோயாளியும் ஒரு படுக்கையை விட்டு இன்னொரு படுக்கைக்கு மாறிக்கொண்டே யிருக்கின்றான். ஒருவன் கணப் பண்டை உட்கார்ந்து கொண்டிருப்பானேன்? இன்னொருவன் ஸதா சாளரத் தண்டை அமர்ந்திருப்பானேன்?

வேறு எங்கேயாவது போனால் நலம் என்று நினைத்து இடம்விட்டு இடம் போவது சகஜமா யிருக்கிறது. ஆகவே நான் எனது அந்தராத்மாவை நோக்கிக் கேட்டேன்.

"அட ஆத்மாவே! குமரிமுனைக்குப் போவோமா சொல். அங்கு ஜில்லென்று இருக்கும்; மூன்று புறத்திலும் கடல் உண்டு; அங்கு குமரித்தெய்வத்தின் அழகான கோயில் ஒன்றுளது. செடியும் கொடியும் புதரும் அந்த ஊரில் அடைத்துக் கொண் டிருக்கவில்லை. உனது ஆசைக்கு ஏற்றபடி ஒளி மிகுந்த பிரதேசம் அதுதான். அங்கு போவோமா!"

எனது ஆத்மா பதில் சொல்லவில்லை.

"அப்படியானால் அந்த ஊர் வேண்டாம். ஆத்மாவாகிய நீ சாந்தமாயிருக்க விரும்புபவன்; ஆனால் சுறுசுறுப்பான வைகளைப் பார்க்க விரும்புபவன். ஆகவே மண்ணில் உள்ள விண்ணுலகம் போன்ற குற்றால மலைக்குச் செல்வோமா? திடுதிடென்று அங்கு அருவி விழுவதைக் கண்டு ஆனந்தமுறுவாய் என்பது திண்ணம். என் பதிலே சொல்லமாட்டேனென்கிறாய்? மேற்கே கள்ளிக் கோட்டைக்குச் செல்வோமா? அங்கு படகுகளும், பாய் மரங்களும் எதேஷ்டமாகக் கண்ணிற்படும். நாம் தங்கியுள்ள வீட்டின் கொல்லைப் புறத்தின் கால்வாயினின்று படகோட்டிகளின் பாட்டுக்கள் காதிற்படும். அந்த ஊருக்குப் போவோமா?"

எனது ஆத்மா அப்போதும் ஊமையாயிருக்கிறது.

"ஒரு வேளை உனக்கு வேற்று நாடுகளுக்குச் செல்ல வேண்டுமோ? ஜாவாத் தீவிற்குப் போவோம். கரும்பு—கரும்பு—கரும்பு—எங்கும் காணலாம்; தின்னலாம். கிழக்கு நாட்டின் வளமையும், மேற்கு நாட்டின் செய்கைத் திறமையும் அங்கு ஒருங்கே அமைந்துள."

நாசமாய்ப் போக! இந்த ஆத்மா ஒரு பதிலும் சொல்லமாட்டே னென்கிறதே. ஆத்மா செத்துப் போய் விட்டதோ?

"உனது துன்பங்களில் லயப்பட்டு இன்பப் பட்டுக்கொண் டிருக்கிறாயோ? அதுதானே உனது வழக்கம். அப்படியானால் ஸ்மசானம் போன்றுள்ள இடத்திற்குப் போவோமா? நாளைக்கே வடக்கே திபேத்துக்குப் போக டிக்கட் வாங்கட்டுமா? இன்னும் வடக்கேயுள்ள பாலைவனங்களுக்குப் போவோமா? சைபீரியாவின் சதுப்பு நிலத்திற்குப் போவோமா? அதையும் தாண்டி வட துருவத்திற்கு வேண்டுமானாலும் செல்வோம். அங்கு சூரியனின் கிரணங்கள் பூமியிற் பட்டதும் படாததுமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கிறதாம். இரவும் கிடையாது; பகலும் கிடையாது; ஒரே திணிஸாக எப்போதும் இருக்கிறதாம். அங்குள்ள இருளில் நாம் குளிப்போமா? ஒரோர் சமயங்களில் உஷாதேவியின் விஷமத்தினால் செக்கச் செவேலென்ற கிரணங்கள் ஒளிருவதுண்டாம். அந்த நகரத்தில் வாண வேடிக்கை நடப்பதுபோல அந்தத் தோற்றம் இருக்குமாம். அங்குதான் போவோமே."

கடைசியாக எனது அந்தராத்மா பேசத் தொடங்கிற்று. சாந்த பயமான அதன் குரல் என் காதில் விழுந்தது. "பாவி மனுஷா! இந்த உலகில் எங்கே போனாலும் எனக்குத் திருப்தி கிடையாதடா!"

Have your Majestic figures at

R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.

"The Best" and most up-to-date staff and finish.

Artists & Bromide Enlargers & Oil Painters.

55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

குரு கோவிந்த சிங்கன்

(வ. வே. ஸு. அய்யர் எழுதியது)

[பூர்வ கதை :—தந்தை தேக பகதூரைச் சிரச்சேதம் செய்த டில்லி பாதுஷாவையும் முகலாயரையும் பழி வாங்க எண்ணிய மகன் குரு கோவிந்தனுக்குத் தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் ஐந்து சிஷ்யர்கள் சேருகிறார்கள். சிஷ்யர்களுக்குச் சம்ஸ்காரம் செய்து வைக்கவே, அவர்கள் புதியதோர் ஒளியுடன் விளங்குகிறார்கள்.]

வீர உபதேசம்

அவர்களுடைய தேஜஸைப் பார்க்கப் பார்க்க, குருவினுடைய இருதயத்தில் ஆனந்தம் பெருகிக்கொண்டேயிருந்தது. தான் நினைத்த காரியத்தையெல்லாம் நிறைவேற்றிவிட முடியுமென்கிற தைரியம் அவனுக்கு உண்டாயிற்று. அடுத்த நாள் ஜனங்கள் அவனுடைய ஆணைப்படி அங்குவந்து கூடினார்கள். கூடிய சிஷ்யர்களுக்குக் குரு தானே உபதேசம் செய்யாமல், தன்னுடைய பிரதம சிஷ்யர்களை உபதேசம் செய்யும்படி ஆணையிட்டான். குரு அவர்கள் மீது காட்டிய நம்பிக்கையும், அவர்களுக்குக் கொடுத்த சுதந்திரமும், அவர்களுக்கு முன்னிலும் அதிகமான வீரியத்தையும் பலத்தையும் ஒளியையும் தந்துவிட்டன. ஆனால் சிறிதேனும் அகங்காரமின்றி, அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கு, தர்மத்தைப் பற்றியும், தியாகத்தைப் பற்றியும், ஆத்மாவைப் பற்றியும், ஈசுவரனைப் பற்றியும், பக்தியைப் பற்றியும், ஞானத்தைப் பற்றியும் சாங்கோபாங்கமாக உபதேசம் செய்து விட்டு, அழிந்துபோய்க் கொண்டு வருகிற சனாதன தர்மத்தை மறுபடியும் சம்ஸ்தாபனம் செய்வதற்காகத் தோன்றியுள்ள குரு கோவிந்த சிங்கனுடைய ஆணைக்கு இரண்டு சொல்லாமல் அவனது ஆணைப்படியே நடந்து வந்து, மொகலாய அரசாட்சியை வீழ்த்தி வெற்றி பெறுவோம் என்று பேசி முடித்தார்கள். பிரசங்கம் முடிந்ததும் ஒருவன் எழுந்திருந்து, "ஹிந்துக்களாவது மொகலாயரை வெல்லுவதாவது? அது எங்கே நடக்கப் போகிறது? மொகலாயர் வல்லூறைப் போல வன்மை படைத்தவர்களாயிருக்கிறார்கள். ஆயிரம் குருவிகள் சேர்ந்தால்தான் ஒரு வல்லூறை அடித்துவிட முடியுமா?" என்று கூறினான். ஹிந்து ஜாதியில் தூங்கிக் கொண்டிருந்த குண்டலினி சக்தி இருக்கிற இடத்தைக் கண்டுபிடித்து, அதை எழுப்பிவிடும் தந்திரத்தையும் சோதித்தறிந்து கொண்டு, முந்தின நாள்தான் முதல் வெற்றியை—அதிலும் அசாமானியமான ஜயத்தை—பெற்றிருந்த குருவின் மனதில் இவ் வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன. ஆகையால் அவன் உடனே எழுந்து சிஷ்யர்களைப் பார்த்துப் பின்வருமாறு பேசலானான் :

"ஹிந்து ஜாதியைக் குருவிகளுக்குச் சமமாகச் சொல்லுகிறாய்; மொகலாயரை வல்லூறுகளுக்கு ஒப்பிடுகிறாய். இந்தக் குருவிகளே வல்லூறுகளை அடித்து வீழ்த்தி வெல்லும்படி செய்யாமற் போனேனேயானால், என்பெயரை மாற்றி வைத்துக்கொண்டு விடுகிறேன்! மகா சக்தியின் அருள் வந்து விட்டது; சிஷியரது வீர வாளில் அவள் சான்னியத்தியமாக நிற்பதை நான் காண்கிறேன். ஜயசண்டி! எனது காலஸா வெல்லப் போகிறது—அதன் முன்னே யாரும் நிற்கமுடியாது! வாருங்கள், கலாஸாவின் முதல் கோஷ்டியான என் அருமைப் புதல்வர்களே! உங்கள் தோள்மீது அகால புருஷன் தனது சக்தி வெள்ளத்தை வர்ஷிக்கிறான். உங்கள் எதிரே உருவின வாட்கள் ஆயிரம் ஓங்கப்பட்டு வந்தாலும் உங்கள் நெஞ்சமானது கலங்காது நின்று அவைகளை எதிர்த்துத் தாக்கும் பலத்தை உங்களுக்குக் கொடுக்கும்: ஸத் ஸ்ரீ அகால் என்று சிங்கநாதம் செய்துகொண்டு நீங்கள் சத்துருக்களைத் தாக்கிச் செல்லும்போது சத்துருக்களின் தளமானது, கப்பலின் முகப்புக்கு இடங் கொடுத்துக்கொண்டு கிழிந்து போகும் கடல் நீரைப்போல, உங்கள் வேகத்தைத் தாங்க மாட்டாமல் பின்னிடைந்து சின்னாபின்னமாய் விடும். சண்டமாருத வேகத்தோடு செல்லுகிற நீங்கள் வெற்றியில்லாமல் திரும்பவே கூடாது. வெற்றியில்லையேல் மரணம்! அந்தப் பிரகாரம் போர் முனையில் மடிகிறவனே அகால புருஷனுடைய கிருபைக்குப் பூரணமான பாத்திரன். அவனே மனிதனாய்ப் பிறந்ததற்காகத் தான் செய்யவேண்டிய கடமைகளைப் பூரணமாய்ச் செய்துவிட்டு அகால புருஷனுடைய சன்னிதானத்துக்குச் சீக்கிரம் சென்று அங்கேயுள்ள நிரதிசயமான ஆனந்தத்தை அனுபவிக்கிறவனாகிறான். பௌராணிக மதத்தை நம்புகிற ஹிந்துக்கள் அப்ஸரஸாக்களின் ஆலிங்கனத்தை நினைத்துப் போர் செய்கிறார்கள், முஸ்லீம்கள் ஹௌரிகளின் ஆலிங்கனத்தை மனதிலெண்ணி வீரவெறி கொள்ளுகிறார்கள். ஆனால் இதெல்லாம் பொய்க் கதைகள். நிஜமாகவே இருந்தாலும், சரீரம் போன பிறகும் காமத்தை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை வைத்துக்கொள்ளுவது எவ்வளவு இழிவான மனப்பான்மையைக் காட்டுகிறது? அகால புருஷனுடைய சன்னிதானத்தை உடனே சேரும் பாக்கியத்தை எதிர் பார்த்து, இவ்வுலகத்துக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக, சத்துருக்களின் வாள்களை லக்ஷியம் செய்யாமல் மேற் சென்று தாக்குவது எவ்வளவு உயர்ந்த தன்மை! அந்தத் தன்மை உங்களுக்குச் சித்திக்கட்டும். காலஸாவுக்குள்ளேயும் உங்களை அகாலியர் என்கிற தனிக் கோஷ்டியாக அமைக்கிறேன். உங்கள் தலையின்மீது, தலைப்பாகையினுள்ளே விஷ்ணு சக்கரத்தைத் தரியுங்கள்: அந்தச் சுதர்சனத்தின் சேர்க்கை உங்களுக்கு அதன் அக்னி ஜ்வாலை போன்ற தன்மையைத் தரும். உங்கள் நீல உடையையும் ஆஜானுபாகுவான உடலையும் நெருப்புப் போன்ற விழியையும், தாடியினாலும் பிறவற்றாலும் வாளரி போன்றிருக்கும் தோற்றத்தையும் கண்ட மாத்திரத்திலேயே உங்கள் சத்துருக்கள் கதி கலங்கிப் போய்விடுவார்கள்.

"எல்லோரும் அகாலியராயிருந்தால் நான் பரமானந்த முறுவேன். ஆனால் பிற சிஷ்யராகிய நீங்கள்

அகாலியர்போலச் சர்வ தியாகிகளாக இராமற் போனாலும் அவர்களுக்கு அடுத்தபடியிலே இருக்கப்போகிறீர்கள்: உங்கள் தெய்வ பக்தியும், மனச் செம்மையும் உங்கள் சரீர அமைப்பையே மாற்றப்போகின்றன: உங்களிடம் வீர லக்ஷ்மியும் விஜய லக்ஷ்மியும் பிரசன்னமாக இருக்கப்போகிறார்கள். அகால புருஷனுடைய கிருபை உங்கள்மீது அமோகமாகப் பெருகப்போகிறது. உங்களுடைய வீரியத்தினால் பாரத தேசத்தின் சத்துருக்களை வென்று ஸ்வராஜ்யத்தை ஸ்தாபித்து ஹரி பக்தியும் அறவாழ்க்கையும் நாட்டில் பரவும்படி செய்யுங்கள். அப்பொழுதுதான் என் பிதா தேகபஹதூரின் ஆத்மா திருப்தி அடையும். அப்பொழுதுதான் பாரத தேசத்தின் அழிந்துபோன தேசு மறுபடியும் ஒளிரும். அப்பொழுதான் உலகில் சத்திய யுகம் மறுபடியும் பிறந்து ஹிந்துக்களும் முஸல்மான்களும் பிறரும் சகோதரர் போல அன்னியோன்யமாய் வாழத் துவக்குவீர்கள்.”

குரு பேசின இவ் வார்த்தைகள் அங்கு கூடியிருந்த எல்லோருடைய மனதிலும் பௌருஷத்தையும் சக்தியையும் புதிதாக வார்த்துவிட்டன. அவர்களுடைய தோள்கள் வீங்க ஆரம்பித்தன: இப்பேர்ப்பட்ட பக்தனும் வீரனும் தங்களுக்குக் குருவாகவும் சேனாபதியாகவும் ஏற்பட்டுவிட்டபோது தங்களுக்கு அசாத்தியமான காரியங்கள் ஒன்றுமில்லை என்று அவர்கள் எண்ணத் தலைப்பட்டார்கள். குருவும் அவர்களுக்குள் ஓர் தார்மிகமான கட்டு ஏற்படுவதற்காக அவர்களுக்குச் சில சம்பிரதாயங்களையும் சின்னங்களையும் வகுத்து வைத்தான். அவைகளுள் பிரதானமானவை பின்வருமாறு:

ஒவ்வொரு சிஷ்யனும் தலை மயிரைப் பிறந்த மேனிக்கே வளர்த்துவர வேண்டியது. தலை மயிர் வளர்ப்பதால் அதைச் சிக்குப்பிடியாமல் வைப்பதற்காகத் தலையிலேயே ஓர் சீப்பைத் தரிக்கவேண்டியது. கச்சம் அதாவது உள்ளே போடும் காற் சட்டை தரிக்க வேண்டியது. பாரத பூமியைக் காக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று காட்டுவதற்குக் கையில் ஓர் இரும்பு வளை அணியவேண்டியது. எல்லாவற்றிற்கும் மேலே, ஓர் வாள் எப்பொழுதும் தரிக்க வேண்டியது. இவற்றின் பஞ்சாபிப் பெயர்களெல்லாம் ககரத்தில் துவங்குவதால் இவைகளைச் சிஷ்யர் பஞ்ச ககாரங்கள் என்று குறிப்பிடுவது வழக்கம். * குழந்தைக்கு ஏழு வயது ஆனபிறகு அவனுக்கு ஐந்து சிஷியர் சேர்ந்து அவர்களுடைய கிரந்தத்தினின்று சில மந்திரங்களைச் சொல்லித் தீர்த்தப் புரோக்ஷணை செய்ய வேண்டும். இதுவே அவர்களுடைய உபநயனச் சடங்கு. இந்தச் சடங்கு ஆனபிறகு அவன் மேற்சொல்லிய ககர வர்க்கம் ஐந்தையும் மரண பரியந்தம் அணியவேண்டியது. சிஷ்யர் விக்கிரகங்களை ஆராதியாமல் நாம ரூபங்களுக்கு அதீதமாக உள்ள அகால புருஷனையே ஆராதிக்கவேண்டியது. நானகன் முதலிய பத்துக் குருககளிடமும் பரமபக்தி செலுத்தி அர்ஜுன குரு தொகுத்து வைத்த ஆதி கிரந்தத்தைப் பயபக்தியோடு படித்து வந்து அதில் கூறிய ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் அனுஷ்டிக்க வேண்டியது. சாத்தியமானபோது அமிருதசரஸ் நகரத்திலுள்ள ஸ்வர்ணாலயத்துக்குத் தீர்த்த யாத்திரை சென்று அங்குள்ள அமிருதசரஸ் என்கிற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துகொள்ளவேண்டியது.

இந்தச் சம்பிரதாயமான விதிகளும், லாகிரி வஸ்துக்களை விலக்கிச் சுசியும் தர்மமுமான வாழ்க்கைக்கு வேண்டிக் குருவால் நியமிக்கப்பட்ட பொது ஆசாரங்களும், எல்லாவற்றிற்கும் மேலே குருவினிடத்தில் அவர்கள் வைத்த பரம பக்தியும் சிஷ்யரை ஒற்றுமையாயுள்ள ஒரே குடும்பம்போலச் செய்துவிட்டன.

இந்த வஜ்ராயுதம்போன்ற ஆயுதத்தை வார்த்து, அதை நாம் மேலே சொல்லிய பிரகாரம் கருக்கும் இட்ட பிறகு, குரு கோவிந்த சிங்கன் ஔரங்கஜேபின் தளகர்த்தர்களோடு பகிரங்கமாய்ப் போர் தொடங்க ஆரம்பித்துவிட்டான்.

காட்டில் சஞ்சரித்த இருபது வருஷங்களில் கோவிந்தன் போர் முறைகளைப்பற்றித் தீர்க்காலோசனை செய்து வைத்ததோடு முற்காலத்தில் போர் செய்த வீரரின் தந்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அறிந்துகொண்டிருந்தான். எதிரிகளைத் தாக்குவதாயிருந்தாலும், எதிரிகளுக்குத் தாத்காலிகமாய்ப் பின்னடைய வேண்டியிருந்தாலும் கோட்டைகளும் துர்க்கங்களும் அவசியம் என்பதை அவன் நன்கு அறிந்துகொண்டு ஸத்லெஜூக்கும் யமுனைக்கும் இடையே உள்ள குன்றுகளில் இரண்டு மூன்று துர்க்கங்கள் கட்டினான். தவிர கியார்தா பள்ளத்தாக்கில் நாஹன் என்னும் நகருக் கருகிலுள்ள பௌன்தா என்ற இடத்தில் ஓர் படை வீடு தயாரித்து வைத்துக்கொண்டு, தன் தகப்பனார் தேகபஹதூர் கட்டி வைத்த ஆனந்தபூர் மாகோவால் என்கிற கோட்டையையும் சம்கௌடம் என்கிற கோட்டையையும் புதுப்பித்து வைத்துக்கொண்டான்.

இக் கோட்டைகளின்மீது சார்ந்து நின்றுகொண்டு குரு கோவிந்த சிங்கன் அத்தியாசாரங்கள் புரிந்து வந்த மொகலாயர்களையும் அவர்களுக்கு அநுகூலமாக இருந்து ஜனங்களை இம்சித்துவந்த சிற்றரசர்களையும் அங்கங்கே தாக்கிவந்தான். இப்படி இவன் தாக்கினவர்களுக்குள் முதலவன் நாஹன் நாட்டுச் சிற்றரசன். இவன் குரு கோவிந்தனுக்கு வெகு நாட்களாகச் சிநேகிதனாக இருந்தவன். ஆனால் குருவானவன் மொகலாயர்களுக்கு விரோதமாகத் துவஜம் கட்டியதும், நாஹன் அரசன் தன் அரசுக்கு ஹானி வந்துவிடப் போகிறது என்று பயந்து மொகலாயர் கக்ஷியில் சேர்ந்துகொண்டு குருவை எதிர்க்கத் தலைப்பட்டான். அவனுக்கு ஹிந்தூர் அரசனும் துணைவனாகச் சேர்ந்தான். இவ் விரு அரசர்களும் குருவைத் தாக்கி வந்ததோடு, குருவினிடம் சேவகம் செய்து வந்த பட்டாணிகளை அவனுக்கு விரோதமாகக் கிளம்பும்படி தூண்டியும் விட்டார்கள். பல சிறு போர்கள் நடந்தன. கடைசியாக இரு கக்ஷிக்காரரும் வியூகம் வகுத்துக்கொண்டு எதிரெதிராய் நின்று போர் தொடக்கினார்கள்.

[கதையின் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்க்கவும்.]

* கேசம், கங்கம், கச்சம், கடா (இரும்பு வளை), கிருபாணம் (வாள்).

ஆகார ஆராய்ச்சி

(திப்புவும் நண்பனும்)

யாரையா? வருகிறீரா—பயப்படாமல் வாரும். ஒரு சாம்பிள் சாப்பாடு மட்டும்தான். இப்போது எங்கே போகிறோம் தெரியுமா? கொஞ்ச காலத்துக்கு முன்னே நான் வாசம் செய்த அந்த இடத்துக்குத்தான் போகிறோம். பயப்படாதேயும். இதற்குத்தான் 'ஜெயில் ஜெயில்' என்று ஊரார் சொல்வது.

பயப்படாதேயும். உட்காரும் கீழே. பிடியும் இந்த அலுமினியம் தட்டை உமது கையில். இதில் எத்தனையோ பேர் தின்றிருப்பார்களே என்று சுணங்குகிறீரா. அதெல்லாம் இங்கே பார்க்கக் கூடாதையா? பிடியும் என்றால் பிடியும்! அதில் இதோ ஒரு மொத்தை வைக்கின்றாரே, அதுவும் அரிசிச் சாதம்தான். ஒவ்வொரு பருக்கையும் விழித்துப் பார்க்கிறதே யென்று பயப்படுகிறீரா. பயப்படாதேயும். நமது காத்தா திதிக்கு உருண்டையாகப் போடுகிறோம். கோயிலில் பட்டையடித்துப் பட்டாசாரி தருகிறான். அதேமாதிரி இங்கே அழகாக அச்சடித்து எட்டு அவுன்ஸ் சோறு தருகிறார்கள். எட்டு அவுன்ஸை வெளியுலகத்தில் இரண்டுபேர் சாப்பிடலாமே யென்கிறீர்களா? இங்கே இருந்து வேலை செய்தீரானால், அப்போது இத்தனையும் ஜீரணித்து விடுவீர்களென்பது நிச்சயம். இப்போது 'ஸாம்பிள்' பாரும் போதுமானது.

அதோ அதில் ஊற்றுகின்றாரே, அது என்ன தெரியுமா? அதில் நிறையத் தழைகள் விழுகின்றன. பிள்ளையாருக்குப் பிரியமான அருகம் புல்லும் கொஞ்சம் சேர்த்திருக்கிறார்கள். சமையலறையில் வேலை செய்த அந்தப் புண்ணியவான் கம்பிளியினின்று எதையோ கொஞ்சம் உதிர்த்திருக்கிறார். பரவாயில்லை; இதற்கு என்ன பெயர் தெரியுமா? இதுதான் 'ஜெயில் சாம்பார்.' இன்றைக்கு முள்ளங்கிக் கீரை சாம்பார். நேற்றைக்குப் பூசணிக்காய் சாம்பாராம். நாளைக்கு முள்ளங்கிச் சாம்பாராக்குவார்களாம். பார்த்தீரா மூலைக் கட்டின துவரை முழித்து முழித்துப் பார்க்கிறது. அந்தச் சோற்றுக் கட்டியை அப்படியே உதிர்த்து ஒரு அடி அடியும். குதிர் வாய்க்கு மண் பூசுகின்ற தோரணையில் நடத்தவேண்டும். என்ன விழிக்கிறீரே! நெய்யா? அப்பப்பா ராஜ சீரம். ஜெயில் சாப்பாடு சாம்பிள் பார்க்க வந்த விடத்தில் நெய்யென்று மூச்சுப் பரியலாமா! என்ன இரண்டுபிடி விழுங்கிவிட்டு ஒக்காளமெடுக்கிறீரே—சே, சே, அப்படி செய்யாதேயும். இருப்பு அண்டாவில் குழம்பு வைத்தார்களாம். உடம்புக்கு இரும்பு சத்து ஏறுவது நல்லதுதானே!

வயிறு குழைந்து கெஞ்சுகின்றது. கையோ திணிக்கின்றது. நாக்கு உள்ளே தள்ள மறுக்கின்றது. இந்த யுத்தத்திற்குப் பெயர்தான் சிறையில் ஸி. வகுப்புக் கைதிகள் சாப்பிடும் பரமான்ன போஜனம். மோரா? மோர், கீர், ஒன்றும் கிடையாது. சர்க்காரிடம் இதற்குப் பணம் இல்லையாம். இந்த இலைக் குழம்பையும், முழிக்கும் சோற்றையும் திணித்தால் நான்கு நாளைக்குள் சீதபேதி கண்டுவிடுமே என்று கேட்கிறீரா? வாஸ்தவம். வரத்தான் வரும்; வரவும் வருகிறது. சீதபேதி வைத்தியத்தில் சிறை டாக்டர்கள் மகா நிபுணர்கள். ஆல்பா மிக்சர் கொடுத்து அலுத்துப் போன பின்பு 4ம் நெம்பர் மருந்தைத் தருவார்கள். எவ்வளவு வேணுமானாலும் மருந்து தருவதற்குச் சர்க்காரிடம் பணமிருக்கிறது. ஆனால் மோருக்கு மட்டுமோ தம்பிடிகூட இல்லவே யில்லை. போதுமா ஜெயில் போஜனம்? வாரும் வெளியே போவோம். ஸலாம், ஜெயிலர் துரையே!

இப்போது போகிறோமே, இதுதான் குசேல நிவாஸ் ஹோட்டல். நமது தேசத்தில் எத்தனை தினிஸு ஆகாராதிகள் இருக்கின்றன வென்று கேட்டீர்களே, அதற்காக ஒரோர் இடமாய் உங்களை அழைத்துக் கொண்டு போகிறேன். இந்த ஹோட்டலில் நேர்த்தியான சிற்றுண்டிகள் கிடைக்குமெனப் பலகை கூப்பிடுகின்றது. வாரும் உள்ளே போவோம்.

இதைத்தான் போண்டா என்று சொல்வது. தமிழ்ப் பெயரா யில்லையே என்று கேட்காதீர். வேறோர் பாஷைப் பெயர் வைத்தால்தான் சாமான்கள் விற்பனையாகுமென்று இப்படி 'தடால் பிடால்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். போண்டாவைப் பிழியும். அதினின்று தைலம் ஒழுகும். அது நல்லெண்ணை யில்லையையா; தேங்கா யெண்ணையு மில்லை. என்ன பசலி 88 பேர்வழியா யிருக்கிறீரே—அதுதான் 'ஜாரி' என்று பெயர். சரக்குப் போடுவதற்கு அதுதான் மலிவான எண்ணை. சோழ நாட்டு ஹோட்டல்களிலே கடலை யெண்ணை—வடக்கே குஸும்பா யெண்ணை—இங்கே 'ஜாரி.' ஐயோ பாவம் முழிக்கிறீரே.

தித்திப்பு சாமான் சாப்பிடுகிறீரா? அதெல்லாவற்றையும் சுத்த நெய்யென்று நினைத்துவிடாதீர். ஏதோ சில ஹோட்டல்காரர்கள்தான் அந்தத் தப்புச் செய்வார்கள். அநேக ஹோட்டல்களில் மார்வோதான் விசேஷ உபயோகம். நெய் மாதிரியே உருவத்தில் இருக்குமையா அது. உங்கள் வீட்டுப் பசுவை மனதில் ஸ்மரித்துக்கொண்டு இந்தச் சாமானை விழுங்கும்; நெய்ப் பட்சணமாகிவிடும். ஆதிகாலத்தில் கொழுப்புக் கலந்து நெய் விற்பார்களாம். அது கொஞ்சம் நாஸுக்காக வெஜிடபிள் பிராடக்டுக்கு வந்திருப்பது நாம்செய்த நல்லதிர்ஷ்டமே யல்லவா?

இந்தக் கார பட்சணங்களையும், தித்திப்புச் சரக்குகளையும் டன் கணக்கில் கோடிக்கணக்கான பேர் அன்றாடம் ஸம்ஹாரம் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். விஷயம் இப்படியே நடந்து கொண்டு போக வேண்டியதுதானே! இதுவாவது தேவலை. நம் தேசத்துக் குழந்தைகள் சாப்பிடுகின்ற ஆகாரத்திற்கு இது ஆயிரம் பங்கு நல்லதென்று தோன்றுகிறது.

ஒரு நாள் ஒரு குழந்தை ஏதோ ஒன்றைக் கையில் மென்று கொண்டிருந்தது. மரத்தூளைக் கோந்தோடு

பிசைந்து தட்டிவைத்தாற் போல ஒரு சாமான். வாய்க்கு வெகு இனிப்பாக இருப்பதாகக் குழந்தை கூறிற்று. உடம்புக்கு நல்லதா வென்று கேட்டேன். அந்தக் குழந்தையின் சாமர்த்தியத்தை என்னென்பேன்! அந்த சாமான் அடைத்து வைத்த டின்னைக் காட்டிற்று. அந்தத் தகரப் டப்பியின் மீது என்னென்ன எழுதியிருந்தார்கள், தெரியுமா? நோயாளி சாப்பிடலாமாம். குழந்தை சாப்பிடலாமாம். கிழவர் சாப்பிட்டால் பால்யம் திரும்பி விடுமாம். ஒல்லியாள் சாப்பிட்டால் சதை பிடிக்குமாம். குண்டன் தின்றால் சதை வாங்குமாம். அது ஏதோ ஓர் தேவசிருஷ்டியென்றே எனக்குத்தோன்றிற்று. ஆனால் இவைகளைத் தின்கின்ற குழந்தைகள் சீக்கிரத்தில் தெய்வலோகம் போனால் பரவாயில்லை யல்லவா? கைக் குழந்தைக்குக்கூட டப்பி 'மாவு' இருக்கிறதையா. டப்பியின் லேபிள்மீது மினுமினுவென்று ஓர் பசுமாடு மேய்கிறது. அந்த மாட்டின் சத்துத்தான் டப்பிக்கு உள்ளேயும் இருக்கிறதாம். இன்றைக்கு வாசலில் வாங்கின பாலை நாளன்றைக்குக் காய்ச்சிக் குடிப்போர் இந்த நாட்டில் இல்லை. "பால் திரிஞ்சு போகுமே. குழந்தைக்கு ஆகாதே" என்பார்கள். ஆனால் மூன்றும் வருடத்திலே ஐரோப்பாவிலே புட்டியிலடைக்கப்பட்ட பாலைக் கொஞ்சம் கூடச் சங்கோசமின்றிக் குழந்தைக்குப் போட்டுவிடுகிறார்கள். அவர்களைச் சொல்வானேன்? நிறையப் பட்டம் பெற்ற டாக்டர் 'ரெகமண்ட்' செய்கிறார். பாலற்றுப்போன தாய்மார்கள் சங்கடமின்றிப் புகட்டுகின்றனர். இவைகள்தான் நமது தேசத்துக் குழந்தைகளின் ஆகாரங்கள்.

இ. வி. நாக்ஸ் என்ற ஆங்கில ஆசிரியர் ஆகாரத்தைப் பற்றி ஓர் கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர் சொல்கிறார்:—"ஹா! என்ன லேபிள்கள்! என்ன மினுக்குகள்! எவ்வளவு விளம்பரப் பலகைகள்! சங்கீதத்தின் நடுவே விளம்பரம். எலெக்டிரிக் விளக்கில் விளம்பரம்! மோட்டார்களிலுமுண்டு. இத்தனையும் எதற்காக? மண்ணைச் சாப்பிடச் சொல்வதற்காக. நம் வம்சத்தை அடியோடு ஒழித்துப் போடுவதற்குச் சர்வதேசச் சங்கச் சூழ்ச்சி ஒன்று இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை........இந்தச் சாமான்களையெல்லாம் காணும்போது இவைகளைக் கண் காணாத கடலில் போடலாகாதா என்று எண்ணுகிறேன்" என்கிறார் அவர்.

ஐயா, உமக்கு அலுப்பு வந்து விட்டதா? சரி. அப்படியானால் டப்பியிலடைத்த மீனில் இண்டு பொறுக்கிக் கொள்ளும். டப்பியில் மிதக்கும் பழங்கள் இரண்டைக் கடியும். எல்லாம் பல வருடங்களுக்கு முன்னே பக்குவமாகப் 'பாக்' செய்யப்பட்டது, தெரியுமா? கை படாமல் பாக் செய்யப்பட்டதாக எழுதி ஒட்டியிருக்கிறதைப் பாரும். என்னமோ சொல்ல விரும்புகிறீரா? சொல்லும் கேட்போம்.

"ஐயா, போதுமையா உணவு ஆராய்ச்சி செய்தது! தின்கின்ற தீனி இப்படி யிருந்தால், இந்தத் தேசத்து ஜனங்களுக்குப் பலம் எங்கிருந்து வரும்? அமெரிக்காக்காரனும், ஸ்வித்ஸர்லாந்துக்காரனும் தேக பலத்தைப் பாக் செய்து அனுப்புகிறார்களென்றால் நம்பக்கூடியதா? சிறையிலிருந்து நமது வீடு வரையில் தீனிகள் திருந்த வேண்டும். இதையெல்லாம் பார்க்கும்போது நமது சட்ட சபை வீரர்கள் உணவுச் சீர்திருத்த இயக்கமொன்றை ஆரம்பித்தா லென்னவென்று தோன்றுகிறது. இவர்கள் வாராவதி கட்டுவதும், பள்ளிக்கூடம் வைப்பதும் அப்புறம் பார்த்துக் கொள்வோம். சாப்பாட்டு ராமர்களைச் சட்ட சபைகளுக்கு அனுப்ப வேண்டுமே யன்றி, இனிப் பேச்சு ராமர்களை அனுப்பிப் பிரயோசனமில்லை யெனப் பிரசாரம் செய்யப் போகிறேன்."

குசாலாய்ச் செய்யும்!

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1932ம் வருஷ முடிவில் அமுலிலிருந்த பாலிஸிகளின் மொத்தத் தொகை ரூ.8,13,60,271

மொத்த ஐவேஜிகள்	....	ரூ. 1,90,00,000-க்கு மேல்
செலுத்தப்பட்ட உரிமைகள்	....	ரூ. 1,00,00,000-க்கு மேல்

பத்திரமும், திடமும் வாய்ந்த பாலிஸிகள்

விசேஷப் பத்திரத் தன்மை பெற்ற பலவகையான பாலிஸிகள்; மிகக் குறைந்த பிரீமிய விகிதங்கள்.

ஸ்திரீகளின் ஆயுட்களும் இன்ஷ்யூர் செய்யப்படுகின்றன.
கூட்டு லைப் பாலிஸிகள் வெளியிடப்படுகின்றன.
கெடுத் தவறுவதற்கு சாசுவதப் பாதுகாப்பளிக்கப்படுகிறது.
வசீகரம் வாய்ந்த வசதிகள்.

இக்கம்பெனிக்கு வேலை செய்வது ஏஜண்டுகளுக்குச் சுலபமானது; அவர்களுக்கு அதிக ஊதியமும் கிடைக்கின்றது.

பூரா விவரங்களுக்கும் தயவு செய்து கீழ்க்கண்டவர்களுக் கெழுதவும்.

நெருப்பு அண்டு மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு, கீழ்க் கண்டவர்களைக் கன்ஸல்ட் செய்யுங்கள்.

நாஷனல் பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி,
பிராஞ்சுக் காரியதரிசி,
113, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

ஏ. வி. தியாகராஜா,
ஆர்கனைசிங் செக்ரடரி,
171, புதுத் தெரு, மதுரை

அரசைக் கவிழ்த்த அடகுக்கடை மோசம்

சென்ற நவம்பர் 28உ தான் அமைந்தது ஒரு பிரஞ்சு மந்திரிசபை. இன்று அது கவிழ்ந்துவிட்டது. காரணம் என்ன? எதாவது பெரிய அரசியல் பிரச்சினையா? தேசோத்தாரண விவகாரமா? அல்லது சர்வதேச சம்பந்தமான சமாசாரந்தானே? இந்த ஒன்றுமில்லை. கேவலம் ஓர் அடகுக் கடைக்காரன் செய்த அதிசய மோசடிதான் பிரஞ்சு மந்திரி சபையைக் கவிழ்த்துவிட்டது. இன்று தினம் பிரஞ்சு அரசாங்கமே கலகலத்து நிற்கிறது. உலகத்திலே சிறந்த வல்லரசுகளில் ஒன்றெனமார் தட்டி நிற்கும் பிரஞ்சுத் துரைத்தனத்தை, ஒரு அடகுக் கடைக்காரனின் காரியங்கள் நிலைகுலைத்து விட்டன.

யாரிட்ட சாபமோ, எவர் வைத்த சூன்யமோ, பிரஞ்சு அரசாங்கம் சில காலமாகவே தத்தளித்துக் கொண்டிருக்கிறது; அடிக்கடி புதுப்புது மந்திரி சபைகள் மாறி மாறி அமைந்துகொண்டிருக்கின்றன. ஆனால், இந்தத் தடவை சூடம்ஸ் மந்திரி சபை கவிழ்ந்தது ஓர் விந்தையான கதையாகும்.

அலெக்ஸாண்டர் ஸ்டாவிஸ்கீ என்ற ஒரு மகா புரட்டன், சூடம்ஸ் மந்திரி சபைக்கு வினையாய் வந்து சேர்ந்தான். இவன் பிறப்பால் ருஷ்யன்; ஆனால், பிரான்ஸிலே குடியேறியவன். இவனுடைய பூர்வ சரித்திரம் பூராவும் பல மோசடிகளின் கதைதான். அதெல்லாம் இங்கு வேண்டாம். பேயன்ன என்ற இடத்து முனிஸிபல் அடகுக்கடையில் இவன் தன் கைத் திறத்தைக் காட்டலானன். இதில் அறுபது லட்சம் பவுன்களை 'அபேஸ்' செய்துவிட்டான். இந்த மோசடி வெளி வந்ததுதான் தாமதம். பிரான்சிலே பெரிய கலவரம்; ஐரோப்பாக் கண்டமெங்கும் இதைப் பற்றியே வம்புப் பேச்சுக்கள்.

ஸ்டாவிஸ்கீ எப்பேர்ப்பட்டவன்? போக்கிரித்தனம், உழைப்பு, துணிச்சல், குயுக்தி இவற்றின் ரூபம்; உயர்ந்த பொருளாதார தந்திரங்களை நன்றுயறிந்தவன். பிரஞ்சு தேசத்திலே ஒரு பெரிய சாவகாரியாகிவிட்டான். பொருளாதார நிபுணனென்று கீர்த்தி பெற்றுவிட்டான் முனிஸிபல் அடகு பாங்கியிலிருந்து இவன் வெளியிட்ட கடன் பத்திரங்களைப் பொது ஜனங்கள் மாத்திரமல்ல, பெரியபெரிய பாங்கிகளும் வாங்க ஆரம்பித்துவிட்டன. டாலிமீர் என்ற குடியேற்ற நாட்டு மந்திரி, இந்தப் பத்திரங்களை எல்லாரும் வாங்கலாம் என்று உத்திரவு வேறு போட்டுவிட்டார்.

போன மகாயுத்தத்திற்கு முந்தியே இந்த ஸ்டாவிஸ்கீ சூதுக் கொட்டகைகளாய்த் தேடிச் செல்லுவது வழக்கம். மூளையற்றுக் காசுமட்டில் நிறையப் படைத்த 'முண்டங்'களை அங்கே பிடிக்கலாம் என்பது அவன் எண்ணம். இப்பொழுது, ராஜாங்கத்தில் பெரும் பெரும் பதவியிலுள்ளவர்களையெல்லாம் தன் கையிற் சிக்கவைத்து விட்டான். அந்தப் பிரமுகர்கள் வேண்டிய வரன்களைத் தருவார்கள்; ஆனல் அவர்களுக்குப் பணமும் பத்திரிகை ஆதரவுந்தான் தேவை. மெல்ல பேயன்ன முனிசிபாலிடியில் சர்க்கார் அனுமதி பெற்ற அடக்குக் கடை ஒன்றை ஸ்தாபித்து, தொழில் நடத்தலானன்.

அவன் தொழில் விநோதமானது. ஒரு உதாரணம் தருகிறோம். 500 பவுன் பெறுமான நகைகளை பேயன்ன பாங்கியில் அடகுவைத்து, இரண்டே கால் லட்சம் பவுன்கள் மதிப்புப் போட்டு, அதற்கேற்ற பெருந்தொகை கடன் வாங்கிவிட்டான். தனது அடகுக்கடையில் ஒன்றுக்கும் உதவாத ஒரு சாமானை அடகு பிடிப்பான். உதாரணமாக, 200 பவுன் பெறுமான பொருளை அடகு பிடிப்பதாய் வைத்துக்கொள்ளுங்கள். இதற்கு 2000 பவுன் மதிப்புப்போட்டு, ஆபீஸ் கணக்கில் அத்தொகைக்குக் கடன் பத்திரம் வெளியிட்டதாகவே எழுதி வைப்பான். ஆனல், 20,000 பவுனுக்குக் கடன் பத்திரம் வெளியிட்டு விடுவான். யாரும்தான் இவன் பத்திரத்தை வாங்குவார்களா; நம்பி வாங்குபவர்களிடமிருந்து கிடைக்கும் பணத்தில் தோழர்களுக்குப் பங்கு கொடுத்தது போக, பாக்கியைக் 'கபளீகரம்' செய்துவிடுவான். இப்படி 60 லட்சம் மோசடியான பிறகு, குட்டு வெளிப்பட்டுவிட்டது.

குடியேற்ற மந்திரியே இவன் பத்திரங்களுக்குச் செலாவணி தேடிக் கொடுத்த கடிதங்கள், பத்திரிகைகளில் வெளிவந்தன. உடனே, மந்திரிசபை மீதே ஜனங்களுக்குக் கோபம் வந்துவிட்டது. இந்த நல்ல சமயத்தைப் பத்திரிகைக்காரர்களோ கட்சிப் பிரதிகட்சியார்களோ சும்மா விடுவார்களா? பலபல கதைகள் கிளம்பின.

இதற்கிடையில் இந்த ஜகப்புரட்டன் ஸ்டாவிஸ்கீ ஒருவருக்கும் தெரியாமல் ஒளிந்த விடத்தைப் போலீஸ்காரர் கண்டுபிடித்தார்கள். அவர்கள் கொண்டு வந்தது ஸ்டாவிஸ்கீயின் பிரேதந்தான். ஸ்டாவிஸ்கீ தற்கொலை செய்துகொண்டான் என்பது சர்க்கார் கட்சி. "இல்லை; அவன் உயிரோடிருந்தால், பல பெரிய உத்தியோகஸ்தர்களைக் காட்டிக் கொடுத்துவிடுவான் என்று பயந்து போலீஸ்காரரே சுட்டுவிட்டார்கள்" என்பது இன்னொரு கட்சி. இதிலிருந்து பெரிய வாதப் பிரதிவாதங்கள், பழிகள், நிந்தனைகள் எல்லாம் கிளம்பிவிட்டன. பல அதிகாரிகள் கைதியானர்கள்; சிலர் வேலை யிழந்தார்கள். அநாகரிகமான 'துவந்த யுத்தங்கள்' நடந்தன. ஒன்று, ஒரு மந்திரிக்கும் ஒரு பெரிய பத்திராதிபருக்கும்; இன்னொன்று, ஒரு ராஜீயவாதிக்கும் ஒரு பத்திராதிபருக்கும்.

இப்படிக் கலவரங்கள் வலுக்கவே, டாலிமீர் என்ற மந்திரி ராஜினமாச் செய்தார். பாரபட்சமற்ற கமிட்டி நியமித்து விசாரணை நடத்துவதாகவும் பிரதம மந்திரி சூடம்ஸ் வாக்களித்தார். ஒன்றினலும் கலவரம் அடங்கவில்லை. கடைசியில் மந்திரி சபையே ராஜினமாச் செய்துவிட்டது; ராஜாங்கமே நிலைகலங்கி நிற்கிறது. ஏற்கனவே பிரதம மந்திரியாயிருந்து பதவி யிழந்த டலாடீர் என்பவரையே மறுபடியும் அந்த ஸ்தானத்தை வகித்து, புதிய மந்திரி சபையை அடைக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறர்களாம். மகா நாகரிகம் வாய்ந்த மேனட்டு வல்லரசுகளின் ராஜீய வாழ்க்கைகளில் இந்த மாதிரி சம்பவங்கள் ஒவ்வொரு சமயம் ஏற்படுவது சர்வ சகஜமாயிருக்கிறது என்பதை மட்டில் நாம் இங்கு குறிப்பிடாதிருக்கமுடியாது.

கீதா பாராயணம்

(மகாத்மா காந்தி)

பகவத்கீதையிடம் எனக்குள்ள பற்றுதலை ஹரிஜன் பத்திரிகை வாசகர்கள் அறிவார்கள். கீதையைப் போன்ற சிறந்த நூல்களை மனப்பாடம் செய்து கொள்வது நல்லது. கீதை முற்றிலும் மனப்பாடம் செய்துகொள்ள வேண்டுமென நான் அடிக்கடி முயன்றதுண்டு. ஆனால் ஞாபகசக்தி விஷயத்தில் என் மூளையின் ஆற்றல் மிகமிகக் குறைவு, என் செய்வேன். ஆகவே எங்கேயாவது கீதையை முற்றிலும் ஒப்புவிக்கக் கூடியவர்களை நான் சந்தித்தால் அவர்களைப் போற்றுவதுண்டு. எனது தமிழ் நாட்டு யாத்திரையின்போது மதுரையில் அத்தகைய பெரியாரொருவரையும், தேவகோட்டையில் ஒரு ஸ்திரீயையும் சந்தித்தேன்.

வாயினால் மட்டும் கீதையை ஒப்புவித்து விடுதல் போதாது என்பதை, கீதா பாராயணக்காரர்கள் உணரவேண்டும். கீதையின் உயர்ந்த உபதேசங்களையும் கருத்துக்களையும் மனம் ஏற்றுக்கொள்வதற்கும், ததேவத்யானத்தில் ஈடுபடுவதற்கும் உதவியாக, பாராயணம் இருக்கவேண்டும். பொறுமையோடு கற்றுக்கொடுத்தால் ஒரு பச்சைக்கிளி கூடச் சொன்னதைச் சொல்லும். அவ்வாறு சொல்வதால் அதற்கு ஏதாவது பயனுண்டா? கீதாசாரியன் என்னென்ன உபதேசங்களைச் சொல்லியிருக்கின்றானோ அவைகளின்படி வாழ்க்கையில் நடப்பதே—அதாவது 'யோகி'யாக வாழ்வதே—பாராயணதாஸனின் கடமை. சொல், மனம், செயல்களில் ஒற்றுமையும் சுத்தமும் அவனிடம் திகழவேண்டும். இப்படியில்லாதவன் கபடன், அல்லது ஆசாரக் கள்ளனே யாவான். இவ்வெச்சரிக்கையை நான் செய்யவேண்டியது அவசியமா யிருக்கிறது. ஏனெனில் என் பிரார்த்தனைகளுக்கு வரும் அநேகர், அப்படி வருவதால் மாத்திரமே பெருமை கிடைத்து விடுவதாய் நினைத்து விடுகிறார்கள். எனது தீண்டாமை விலக்குப் போராட்டத்தில் அவர்களில் பெரும்பாலோருக்கு அனுதாபமுண்டு. ஆதலால், இந்த நம்பிக்கைக் கிசைய அவர்கள் நடக்கையு மிருக்கவேண்டும்; தங்களைவிடக் கீழோன் எவனுமில்லையென்பதைத் தங்கள் செயல் மூலம் காட்டவேண்டும். —"ஹரிஜன்"

பூகம்பமும் தீண்டாமையும்

(மகாத்மா காந்தி.)

"தீண்டாமை விலக்கு வேலையை நிறுத்தி வைத்துவிட்டுப் பீஹாருக்குப் போங்கள்" என்று ஒரு நண்பர் தந்தியடிக்கிறார். "பீஹார் பற்றியெரியும் பொழுது பிடில் வாசித்துக்கொண்டிருக்கிறீர்களே" என்று கோபிக்கிறது இன்னொர் தந்தி. எனது சகாக்களில் மிகச் சிறந்த ராஜேந்திரபாபுவை அங்கு உதவிபுரியக் கடவுள் அழைத்திருக்கிறார். எனக்கு ஆக்ஞை பிறக்கும்பொழுது, நானும் அங்கு போகத் தவறேன். பீஹாரிடம் எனக்குள்ள உறவு புனிதமானது; முறிக்கமுடியாதது. ஆகையால், என்னை அங்கே அனுப்புவதற்கு யார் தூண்டுதலும் தேவையில்லை. முழு உலகமுமே பீஹாருக்கு வந்த பேராபத்தின்மீது கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. உதவி செய்ய யாவரும் தயாரா யிருக்கும் பொழுது, நான் அங்கே ஓடுவேனாயின், அது என் அகங்காரத்தையே குறிக்கும்.

ஹரிஜன நிதியைப் பீஹாருக்கு உதவ வேண்டுமென்று இன்னொரு தந்தி சொல்லுகிறது. இப்படிச் செய்வேனாயின், அது நம்பிக்கை மோசடியாகும். பேராபத்துக்களைக் கண்டு, நாம் நாடி தளர்ந்து குழம்பிப்போகலாகாது.

ஆனால், பீஹாரில் வேலை செய்வோருக்கு நான் ஓர் யோசனைமட்டும் சொல்லவேண்டும். தீய சம்பிரதாயங்களையும் கெட்ட வழக்கங்களையும் மறுபடியும் அவர்கள் உற்பத்தி செய்துவிடலாகாது. உதவியில் ஜாதிபேதம் பார்த்தலாகாது. இயற்கை யன்னை தனது நாச வேலையில் பாரபட்சம் காட்டினாளில்லை. நாம் மாத்திரம், ஹிந்து, முஸ்லீம், கிருஸ்தவர், பார்ஸீ, யூதர் என்று இன்று கொண்டாடிக் கொண்டிருக்கும் பாரபட்சமான பேதங்களை, நமது புனருத்தாரண வேலைகளில் காட்டலாமோ?

மனிதர் செய்த பாவங்களுக்குத் தண்டனையாகவே இத்தகைய பேராபத்துக்கள் வருகின்றன என்பது என் நம்பிக்கை. பீஹார் பூகம்பம் நமது தீண்டாமை என்ற பாவத்தின் தண்டனை என்பது என் மதிப்பு. "புராதனமா யிருந்துவரும் பாவத்திற்குத் தண்டனையேன்?", "பீஹாருக்குமட்டும் தண்டனையா? தென்னிந்தியாவுக்கு ஏன் இல்லை?" என்ற கேள்விகள் என் நம்பிக்கையை அசைக்கவில்லை. இந்தக் கேள்விகளுக்கு நான் சொல்லும் பதில் "நான் கடவுள் அல்ல" என்பதுதான். ஆகையால், ஆண்டவன் சித்தம் என்னவோ? அதைக் குறித்து எனது ஞானம், வரம்புக்குட்பட்ட அற்பமேயாகும்.

—"ஹரிஜன்."

காந்திஜீ தமாஷ்கள்

குட்டியானை

மலையாளப் பகுதியில் குட்ட நாடு என்னுமிடத்தில் ஒரு வாலிபன் ஒரு சிறிய சீசாவைக் கொண்டுவந்தான்.

"பரிமளத் தைலமா?" என்றார் காந்திஜீ.

"இல்லை. இதற்குள் யானைத் தந்தத்தால் செய்த ஒரு குட்டி யானை இருக்கிறது" என்றான் வாலிபன்.

காந்திஜீ "நான் அதன்மீது சவாரி செய்யலாமோ?" என்று வினவினார்.

நகைப்புத்தான்.

கே. ஜீ. யின் போட்டி

அதே குட்ட நாட்டில் காந்திஜீக்கு ஒருவர் சிறு குழந்தை படுக்கக்கூடிய தடுக்கைக் கொணர்ந்து பரிசளித்தார். அதன் ஒரு பக்கத்தில் "மகாத்மாஜீ" என்று எழுதப்பட்டிருந்தது. ஐயன் சட்டென்று இன்னொரு மூலையைத் திருப்பிய பொழுது, "எஸ். ஆர். கே. ஜீ." என்று கையொப்பம் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்.

"ஓ! எஸ். ஆர். கே. ஜீ. அவர்களுடன் மகாத்மாஜீ போட்டி போடுகிறார் போலும்" என்று, குறும்புடன் கண்களைச் சிமிட்டினார் காந்திஜீ.

மௌன வக்கீல்

எர்ணாகுளத்தில் பொதுக் கூட்டம் நடந்தபோது, பக்கத்திலிருந்த ஒரு வக்கீலைப் பார்த்து, "நீங்கள நல்ல வக்கீல்தானே?" என்றார் காந்திஜீ.

அவர் கூச்சத்துடன் மௌனமா யிருந்தார்.

இதைப் பார்த்த காந்தி "தெரிகிறது. அப்படியுமில்லை, இப்படியுமில்லைபோ லிருக்கிறது" என்றார்.

யாத்ரா மார்க்கம்

அருவியில் குளிக்கலாமா?

தென்காசியில் ஹரிஜனங்களின் பிரதிநிதிக் கூட்டமொன்று மகாத்மாஜீயைப் பேட்டி கண்டு பேசியது. குற்றாலம் அருவியில் ஹரிஜனங்கள் குளிக்கலாமாயினும், கோயிலுக்குச் சொந்தமான பாதை வழியாய் நடக்கக்கூடாதென்று கோயிலதிகாரிகள் ஆட்சேபிக்கிறார்களாம். ஆனால், அதே பாதையில் கிருஸ்தவர், முஸ்லீம், ஐரோப்பியர் முதலிய பிற மதஸ்தர் நடப்பதற்கு ஆட்சேபனையில்லையாம். இதைப்பற்றி, அக் கூட்டத்தவர் மகாத்மாஜீயிடம் தெரிவித்துக்கொண்டார்கள். "வேறு பாதை போட்டுவிடலாமே" என்று ஒருவர் சொன்னார். "கூடவே கூடாது. அது தீண்டாமையை நிலையாய் ஸ்தாபிப்பது போலாகும்" என்று மறுத்துவிட்டார் மகாத்மாஜீ. மேலும், இந்த விஷயத்தைத் தாம் கவனித்து வருவதாகவும், தம்மாலான உதவியைச் செய்வதாகவும் ஹரிஜனங்களுக்குத் தெரிவித்தார்.

கடவுளின் தண்டனை

மகாத்மாஜீ பீகார் பூகம்பத்தைப் பற்றித் தமது பிரசங்கங்களில் திரும்பத்திரும்பப் பிரஸ்தாபித்து வருகிறார். ஹரிஜன நிதிக்கு உதவுவதைத் தவிர, பீகார்க் கஷ்ட நிவாரண நிதிக்கும் பணவுதவி செய்யவேண்டு மென்றும், முக்கியமாகத் தமது ஹரிஜன நிதிக்கு உதவாத உத்யோகஸ்தரும் பிறரும் பீகார் நிதிக்கு நிறைய நன்கொடையளிக்க வேண்டுமென்றும் சொல்லி வருகிறார். நாம் ஹரிஜனங்களை இழிவாய் நடத்துவதைக் கண்டு சகிக்காமல் ஆண்டவனே இந்தப் பூகம்பத்தால் நம்மைத் தண்டித்திருக்கிறார் என்று பலவிடங்களிலும் சொல்லி வருகிறார். மதுரைப் பொதுக்கூட்டத்தில் அவர் உரைத்ததாவது:—

"நீங்கள் ஆஸ்திகர். இத்தகைய பேராபத்துக்கள் வந்தால் நாம் செய்த பாவங்களுக்காகக் கடவுள் விதித்த தண்டனை என்றே நினைக்கவேண்டுமென நம் பெரியோர் உபதேசித்திருக்கிறார்கள். இத்தகைய ஆபத்துக்கள் வந்தால், இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களிலும் ஜனங்கள் ஆண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்துவதை நான் கண்டிருக்கிறேன். நாம் நடுநடுங்கும்படி இப்பெருந் தண்டனை வந்ததற்குக் காரணம் என்ன? நாம் அப்படி என்ன கொடும்பாவ மிழைத்தோம்? தீண்டாமை என்ற மகா பாவந்தான் அது என்ற நம்பிக்கை எனக்கு வலுத்துவருகிறது. மூட நம்பிக்கை என்று நினைப்பீர்கள். அதற்கு நான் என்ன செய்யமுடியும்? என் உள்ளத்திலே ஆழப்பதிந்துவிட்ட உணர்ச்சியை நான் எப்படிச் சொல்லாமலிருக்கமுடியும்? இதை நம்பினால் நம்புங்கள்; இல்லாவிட்டால் வேண்டாம். ஆனால், எந்த மனிதனையும் தீண்டாதவனென்று ஒதுக்குவதைவிடக் கோரமான பாதகம் வேறொன்றுமில்லை என்பதை மட்டில் ஒப்புக்கொள்ளுவீர்களென நம்புகிறேன்."

உண்மைப் புத்தகம்

மதுரை மாணவர்களுக்கு மகாத்மாஜீ உபதேசித்தாவது:—"நீங்கள் ஹரிஜனங்களுடன் கலந்து உறவாடவேண்டும். சேரிகளுக்கு, சோப்பு, வாளி இவைகளுடன் சென்று, அவர்களைச் சுத்தம்செய்து விடவேண்டும். பள்ளிக்கூடக் கல்வியைவிட இதுவே சிறந்த கல்வி. சேரிகளுக்குச் சென்றீர்களானால், அங்கும் உங்களுக்கு ஓர் புத்தகம் கிடைக்கும். அது வெறும் புத்தகமல்ல; வெள்ளைக்காகிதத்தில் கறுப்பு மையைக் கொட்டியிருக்கும் பொட்டைப் பாடப் புத்தகமல்ல. பிரத்யட்ச வாழ்க்கையென்ற புத்தகத்தை அங்கே பெறுவீர்கள். இந்தப் புத்தகமே, உங்கள் செயல் திறனை எழுப்பி உருக்கொடுக்கக் கூடியது. இதுதான் சிறப்பான கல்வி பெறும் மார்க்கமாகும்."

அசத்தியம் சாத்திரமாமோ?

நாட்டார் ஹரிஜனத் தகராறைப் பற்றி நண்பர்கள் அறிவார்கள். மகாத்மாஜீ தேவகோட்டையில், நாட்டார்களில் பலருக்குப் பேட்டிகொடுத்துப் பேசினார். நாட்டார்கள் தம் வார்த்தைகளை மிகக் கவனமாகக் கேட்டதையும், சில நாட்டார்கள் சீர்திருத்தத்துக்குத் தயாரா யிருப்பதையும் கண்டு மகாத்மாஜீ சந்தோஷமடைந்தார்.

பல விடங்களிலிருந்தும் வந்த நூறு நாட்டார்களடங்கிய ஒரு கூட்டத்தினிடம் மகாத்மா வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். இடையில் நாட்டார்களுக்கு அவர் சொல்லிய ஒரு விஷயமாவது:—

"ஹரிஜனங்கள் என்னத்தைக் கேட்டுவிடுகிறார்கள்? தாங்களும் மனிதர்கள், ஹிந்துக்கள் என்ற முறையில் பாத்தியமில்லாத உரிமை ஒன்றையும் கேட்டுவிடவில்லை. தங்களுக்கு இஷ்டமான ஆடையாபரணங்களை யணிந்துகொள்ள, ஹரிஜனங்களுக்கும் உரிமை உண்டு. இதில் நாட்டாருக்கு என்ன கஷ்டம்? இன்று உலகத்தில் என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணரவேண்டும். சீர்திருத்தங்களை நீங்கள் எதிர்க்கமுடியாது. ஹரிஜனங்களும் நீங்களும் ஒரே கடவுளின் குழந்தைகள்தான். ஹரிஜனங்களை உங்கள் உடன்பிறந்த சகோதரர்போல் நடத்துங்கள். தீண்டாமைக்குச் சாஸ்திரங்களிலே ஆதாரமிருப்பதாய்ச் சில பண்டிதர்கள் சொல்லக்கூடும். ஆனால், அனுஷ்டானத்திலிருக்கும் தீண்டாமைக்குச் சாஸ்திரத்தில் இடமில்லையென்று சொல்லும் அநேகம் பண்டிதர்களுமிருக்கிறார்கள். அவர்களும் ஹிந்துக்கள், பக்திமான்கள் தான். சாஸ்திரங்களிலே அசத்தியங்கள் இருக்க முடியுமோ? தீண்டாமை என்பது ஓர் அசத்தியமேயாகும். ஆகையால், இதைக் குறித்து நீங்கள் வாதம் செய்யலாகாது. சத்தியத்தைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும்."

Chats Behind Bars

BY

C. RAJAGOPALACHARI

Price As. 6 *Postage extra.*

Sangu Book Depot

Triplicane, Madras.

கேள்விகளுக்குப் பதில்

(மகாத்மா காந்தி.)

கேரளத்தில் என்னிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளையும், அவற்றிற்கு நான் சொன்ன பதில்களையும் கீழே தந்திருக்கிறேன் :—

கேள்வி :—தங்கள் பக்கத்தில் ஹரிஜன சேவை செய்வோருக்கு ஜனங்கள் ஆதரவு கொடுப்பதில்லை. நீங்கள் வந்தால், தாராளமாய்ப் பணம் கொடுக்கிறார்கள். நான் செய்யும் வேலைக்குப் பணம் கொடுக்கும்படி, நீங்கள் வேண்டுகோள் செய்தால், என்ன ?

பதில் : — ஜனங்கள்மேல் குற்றமில்லை. உங்கள் மீதுதான் குற்றம். ஜனங்களுக்கு உங்களிடம் போதிய நம்பிக்கை உண்டாகும்படி, நன்றாக வேலைசெய்து காட்டினால், ஜனங்கள் தவறாமல் உதவி செய்வார்கள். ஜனங்களும் கடவுளைப்போல்தான்; தொண்டரின் பொருமையைச் சோதித்துப் பார்த்து, தொண்டர் நாணயமும் யோக்கியதையும் உடையவர் என்பது ருசுவான பின்னரே, ஜனங்கள் தொண்டரின் பிரார்த்தனைக்குச் செவி கொடுக்கிறார்கள்.

கேள்வி :—எந்தச் சமூகம் தனது ஊழியரை அலட்சியம் செய்கின்றதோ அந்தச் சமூகம் கஷ்டத்துக்கு ஆளாகின்றது என்று ஒரு சமயம் சொன்னீர்களே; ஊழியர் என்றால், ஹரிஜனங்கள் என்பது உங்கள் கருத்தா ?

பதில் :—ஆம். இப்பொழுது அவர்கள் ஜனசமூகத்தின் ஊழியராகவேயிருக்கிறார்கள். அவர்களை இழிவாய் நடத்துவதால், பொருளாதாரம், சமூக வாழ்வு, சுகாதாரம், ஒழுக்கம் முதலிய பல துறைகளிலும் ஜனசமூகத்துக்கு மகத்தான நஷ்டமே விளைந்து வருகிறது. ஆனால், ஹரிஜனங்கள் எப்பொழுதுமே ஜனசமூகத்தின் ஊழியராய் இருந்து வரும்படி நிர்ப்பந்திக்க வேண்டும் என்பது எனது கருத்தல்ல.

கேள்வி : — நம்பூதிரி, நம்பியார், ராமையர் என்ற ஜாதி ஹிந்துப் பட்டப் பெயர்களை ஹரிஜனங்கள் வைத்துக் கொள்கிறார்களே; இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன ?

பதில் :—இந்த வழக்கம் எனக்குப் பிடிக்கவில்லை.

கேள்வி :—பெண்கள் நகைகளைத் தியாகம் செய்யவேண்டுமென்கிறீர்களே; ஜாதி ஹிந்துக்கள் பூணூலைத் தியாகம் செய்யவேண்டுமென்றும் ஏன் சொல்லலாகாது ?

பதில் :—நம்புபவர்களுக்கு அது பவித்திரமான ஓர் மத சின்னமாகும். என்பற்றிய மட்டில் எனக்கு அதில் நம்பிக்கையில்லை; ஆகையால் நான் அணியவில்லை. தங்கள் உயர்வைக் காட்டும் அடையாளம் என்று அதை நினைத்து அணிந்தால், அது நகையை விடக் கேவலமானதே யாகும். அகங்காரத்தை விடாமல், அதைமட்டில் கழற்றுவதனாலும் பயனில்லை. ஹரிஜனங்களுக்கு இஷ்டமானால், அவர்களும் பூணூல் தரிக்கலாம். ஆனால், ஆரம்பத்தில் அதற்கிருந்த உட்கருத்துப் போய் வெறும் 'இமிடேஷ'னாயிருப்பதால், அதை அணிய வேண்டாமென்றுதான் நான் ஹரிஜனங்களுக்கு வற்புறுத்திக் கூறுவேன்.

கேள்வி :—ஒரே மதம், ஒரே ஜாதிதான் இருக்கவேண்டும் என்று ஸ்ரீ நாராயண குரு சொல்லியிருக்கிறார். நீங்கள் எனக்குச் செய்யக்கூடிய உபதேசம் என்ன ?

பதில் :—ஜாதி உயர்வு தாழ்வை அடியோடு ஒழிக்க வேண்டியதுதான். ஜாதி உயர்வு தாழ்வு, தீண்டாமையின் வேறோர் ரூபமே யாகும். ஆனால், வர்ண தர்மத்தை அனுசரித்த ஜாதி முறை, மனித சக்தி விரயமாகாமல் பாதுகாக்கிறது; உண்மையான பொருளாதார முன்னேற்றத்தையும் தருகிறது. அதை உணர்ந்து, அனுசரித்து நடப்பதே நல்லது. ஸ்ரீ நாராயண குரு ஜீவியவந்தரா யிருக்கும்பொழுது அவருடன் இதைக் குறித்து நான் நேரே பேசியிருக்கிறேன். நிற்க, ஒரே கடவுளிடம் நம்பிக்கை வைப்பதுதான். சகல மதங்களுக்கும் அஸ்திவாரமான தத்துவம். ஆனால், உலக முழுவதும் ஒரே மதத்தை அனுஷ்டிக்கும் காலம் வருமென்று எனக்குத் தோன்றவில்லை. ஒரே கடவுள்தான் இருக்கிறார் என்பதால், ஒரே மதம்தான் இருக்கமுடியும் என்று தத்துவமாய் முடிவு கட்டலாம். அனுஷ்டானத்தில் அப்படியில்லை. கடவுளின் இலட்சணங்களைக் குறித்து, கொஞ்சங்கூட வித்யாசமில்லாமல் ஒரேவிதமான அபிப்பிராயம் கொண்டிருக்கும் மனிதர் இருவர்கூட இல்லை. ஆகையால், வெவ்வேறு தேசங்களின் சீதோஷ்ண நிலைமைகளையும், ஜனங்களின் மனோபாவங்களையும் அனுசரித்த பற்பல சமயங்கள் எக்காலத்தும் இருந்து கொண்டிருக்குமென்றே எனக்குத் தோன்றுகிறது. ஆனால், தங்கள் சமயத்தைப்போலவே பிற சமயங்களையும் பற்பல மதஸ்தரும் கௌரவமாய் மதித்து நடக்கும் காலம் மட்டில் வந்துகொண்டிருப்பதை நான் தெளிவாய்க் காண்கிறேன். வேற்றுமைகளுக்கு நடுவேதான் ஒற்றுமையைக் காணவேண்டும்.

—ஹரிஜன்.

இண்டோ யூனியன் அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

மிக முற்போக்கான திட்டங்களை யுடையது;

முற்றிலும் பத்திரமானது;

தாராளமான பாலிஸி ஷரத்துக்களுடையது.

விவரங்களுக்குப் பின்வரும் விலாசத்துக்கு எழுதவும் :—

போஸ்ட் பாக்ஸ் நெ. 350,

மௌண்ட் ரோடு, சென்னை.

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்

(மகாத்மா காந்தி எழுதியது)

கோவை அவிநாசிலிங்கமும், மதுரை சுப்பராமனும் மொழிபெயர்த்தது.

முதல் பாகம் (264 பக்கங்கள் கொண்டது) விலை ரூ. 1—0—0

மகாத்மா காந்தி முதன் முதல் சத்தியாக்கிரகத்தை நடத்தி வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில் தான். அதன் சரித்திரத்தை மகாத்மா தாமே எழுதியிருக்கிறார். இதில் பல உருக்கமான நிகழ்ச்சிகளும், உயர்ந்த தத்துவங்களும், தென்னாப்பிரிக்காவைப் பற்றிய பல விவரங்களும், அங்கு இந்தியர் நிலைமைகளும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த முதல் பாகத்தில், ஐரோப்பியரின் பலத்த எதிர்ப்புக்கிடையே மகாத்மாஜீ தென்னாப்பிரிக்காவுக்குள் பிரவேசித்து, பல ஆபத்துக்களுக்கும் ஆள்பட்டு, பெரிய தொரு சத்தியாக்கிரகப் போரை நடத்தி, சர்க்காருடன் முதல் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது வரையிலுள்ள அரிய சரித்திரம் அடங்கியிருக்கிறது.

18712

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
,, Half Page	Rs. 20 0 0
,, Quarter Page	Rs. 10 0 0
,, per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$.

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு			ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு	,,	,,	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு	,,	,,	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு	,,	,,	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
தீருவல்லிக்கேணி, சென்னை.

சுதந்திரச்சங்கு

தெரிந்தவர் தெரிவிக்க.

மிகவும் புராதனமான காலத்திலிருந்து, நமது நாட்டில், ஹரிஜனங்களில் மிகப் பெரும்பாலோர் தோல் பதனிடும் தொழில் செய்து வருகிறார்கள். இதனால், ஹரிஜன சேவை செய்வோர் இத் தொழிலின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தவேண்டியதா யிருக்கிறது. தோல் பதனிடும் குடிசைத் தொழிலுக்கு நூதன ஸயின்ஸ் முறைகளை எவ்வாறு உபயோகிக்கலாம் என்று கண்டுபிடிக்க வேண்டியது அவசியமா யிருக்கிறது.

கோடம்பாக்கத்தில் ஸ்தாபிக்க விருக்கும் தொழிற் கலாசாலையில் தோல் பதனிடும் வகுப்பும் நடத்த உத்தேசம். நூதன ஸயின்ஸ் முறைகளையும் கருவிகளையும் அத்தொழிலில் எப்படி உபயோகிக்கலாம் என்பதைத் தெரிவிப்பவர்களுக்கு நமது நன்றி உரியதாகும். மேலும், ஹரிஜனங்களுக்கு ஏற்ற தொழில்கள் என்னென்ன என்ற யோசனைகளையும் வரவேற்கிறோம்.

உபாத்தியாயர்கள் தேவை.

கோடம்பாக்கத்தில் ஆரம்பிக்கப் போகிற கைத்தொழிற் கலாசாலையில் பற்பல குடிசைத் தொழில்கள் கற்றுக் கொடுப்பதற்கு, அவற்றில் பயிற்சியுள்ள ஆசிரியர்கள் தேவை. வசிப்பதற்கு இலவச வசதி செய்து தரப்படும். தங்கள் யோக்கியதாம்சங்களையும், என்ன சம்பளம் தேவை என்பதையும் தெரிவித்து, கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவும்.

ஹரிஜன மாணவர் தேவை.

நமது மாகாணத்தின் பல விடங்களிலிருந்தும் ஹரிஜன மாணவர்களை இக் கலாசாலையில் சேர்த்துக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வரையில்தான் தற்பொழுது சேர்த்துக் கொள்ளமுடியும். சேர விண்ணப்பம் செய்து கொள்ளும் சிறுவர், நல்லொழுக்க முடையவராயிருக்க வேண்டும்; மரக்கறி போஜனத்தை மட்டும் உண்டு வாழச் சம்மத முடையவராயு மிருக்கவேண்டும். தமிழ் நாட்டில் அங்கங்குள்ள ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசிகளின் மூலமே தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிக் கொள்ளவேண்டும். 12 வயதுக்கு மேற்பட்டவர்களாயும், முதல்பாரம் படித்துத் தேறியவர்களாயும் உள்ள சிறுவர்களே தேவை.

காரியதரிசி,

கோடம்பாக்கம் கைத்தொழிற் கலாசாலை,

8, வி, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.